# அம்புலி பயணத்தில் அப்பலோ - 10 மகத்தான சாதனை


Registered as weWa spede oyC... விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 389

National Tamil Daily

மலர் 11
இதழ்: 102
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் வைகாசி 11 ரபி;அவ் 7 சனிக்கிழமை [24-5-69



போன்: 7199

தங்க வைரம்

பொ. அம்பலவாணர்

தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் ரோட்,
யாழ்ப்பாணம்.


## 'சந்திரனில் மனிதன் இறங்குவதுபிரச்னை அல்ல

ஹவுஸ்டன், மே23

இன்று அதிகாலை 3 மணிக்கு அப்பலோ-10 விண்வெளுக் கப்பலிலிருந்து பிரிந்து சென்ற சந்திர ஊர்தியில் சென்ற இரு விண்வெளி வீரர்கள் சுமார் 8 மணி நேரம் சந்திரனுக்கு வெகு அருகாமையில் (பத்தரை மைல்) சுற்றி பல தகவல்களைச் சேகரித்து வரலாற்றுப் புகழ்மிக்க சாதனையை நிலைநாட்டிவிட்டு தாய்க் கப்பலுடன் இணைந்து கொண்டார்கள்.

இந்த சந்திர ஊர்தியில் சென்ற இரு வீரர்களில்ஒருவரான ஸ்டபோர்ட் மனிதன் சந்திரனில் இறங்குவது ஒரு பிரச்னையாக இராது என தமது அனுபவக் கருத்தை முதன்முறையாக வெளியிட்டார், சந்திரனுக்கு வெகு அண்மையில் சென்ற சந்திர ஊர்தியில் மற்றொரு வீரரான ஷெர்னனும் சென்றிருந்தார் தாய்க்கப்பலில் தங்கியிருந்து இவர்களுக்கு ஆபத்தேதும் நேர்ந்தால் காப்பாற்றுவதற்கு தயாராகவிருந்துகொண்டு பூமிக்கு தகவல்களை கொடுத்துக் கொண்டிருந்தார்.

சந்திர ஊர்தியில் சென்ற இரு வீரர்களும் குறிப்பிட்ட நேரத்துக்கு பத்து நிமிடத்துக்கு முன்னரேயே தாய்க் கப்பலுடன் இணைந்தனர். நாளைக்காலை 10 மணிக்கு சந்திரனின் சுற்றுப்பாதையை விட்டுப்புறப்பட்டு இவர்கள் மூவரும் பூமியை நோக்கித் திரும்புவர்.

(3-ம் பக்கமும் பார்க்க)

# போதனுமொழிமாற்ற முயற்சி: எதிர்க்க தமிழரசு தீர்மானம்

## நெடுந்தீவில் நிரந்தர இராணுவ முகாமிற்கு இடத்தேர்வு

நெடுந்தீவு, சனி

நெடுந்தீவிற்கு கெலிக்கொப்டர் மூலம் விஜயம் செய்த இராணுவத் தளபதி சேபால அட்டிகலை கெலிக்கொப்டரில் இருந்தபடியே தாழப் பறந்து நெடுந்தீவில் நிரந்தர இராணுவ முகாம் அமைப்பதற்கு பொருத்தமான இடம் பார்வையிட்டார்.

பின் நெடுந்தீவு மத்தியில் உள்ள விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கினர்.

இரண்டு பைலட்டுகளையும் மூன்று பிரயாணிகளையும் ஏற்றக்கூடிய இந்த கெலிக்கெப்டரில் காங்கேசன்துறை சட்டவிரோத கள்ளக்கடத்தல் போன்றவற்றை தடுக்கும் முகாமின் பொலிஸ் சுப்பிரின்டன் திரு. யோசேப்பும் வந்திருந்தார்.

நெடுந்தீவில் கெலிக்கொப்டர் இறங்கியதும் அதில் வந்திருந்த அதிகாரிகள் நெடுந்தீவு பொலிஸ் ஜீப்பில் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சப் இஸ்பெக்டர் திரு. தர்மதாசாவுடன் உரையாற்றிவிட்டு ஒரு மணித்தியாலத்தில் மீண்டும் கெலிகொப்டரில் சென்றார்கள்.

நெடுந்தீவு மேற்கில் உள்ள பெரியதுறைக்கு அருகாமையில் இந்த நிரந்தர முகாம் அமையும் என அறியப்படுகிறது. முதலில் ஒரு லெப்டினதும் ஆறு இராணுவ வீரர்களும் இங்கு முகாமிட்டிருப்பர்களாம்.

நெடுந்தீவில் கெலிக்கெப்டர் வந்திறங்குவதற்கு வேண்டிய ஒழுங்குகளை நெடுந்தீவு பொலிசார் செய்திருந்தார்கள்.

## அபேட்சகர் பட்டியல்

யாழ்ப்பாணம் சனி

யாழ்ப்பாண மாவட்டத்தில் அடுத்த பொதுத்தேர்தலில் தமிழரசுக்கட்சி சார்பில் போட்டியிடவிருக்கும் அபேட்சகர்கள் பட்டியலொன்று ஜூன் மாதம் 1.ம் திகதி வெளியிடப்படவிருக்கின்றது நேற்று முன்தினம் காலை கட்சியின அபேட்சகர் நியமன குழு இது பற்றிக் கூடி ஆராய்ந்தது,

(கா-நி)

## நாவலர் ஆச்சிரமத்தில் விரைவில் நால்வர் கோயில்

யாழ்ப்பாணம், சனி

''அருட்பா மருட்பா வழக்கில் வெற்றி பெற்று சோழப் பேரரசன் வழியில் திருமுறை ஊர்வலம் நடத்திய பெருமை பெற்றவர் புலோலி கதிரவேற்பிள்ளை. அன்னார் வழியில் ஆண்டுதோறும் திருமுறை ஊர்வலமும், திருமுறைக் கோயில்களும் நாடெங்கும் ஏற்படுத்த வேண்டும்''

சித்தாந்தவித்தகர் கயபாக்கம் மு. சோமசுந்தரம் செட்டியார் இவ்வாறு தெரிவித்தார்,

யாழ்ப்பாணம் நாவலர் மண்டபத்தில் முதன்முறையாக கடந்த வியாழக்கிழமை இரவு கொண்டாடப்பட்ட ''நம்பியாண்டார் நம்பி'' திருநாளில் திரு சோமசுந்தரம் செட்டியார் மேலும் பேசுகையில் ஒரு வர்த்தகர் விநாயகர் சுருட்டு என்று பெயரிட்டால் மற்றொரு வர்த்தகர் முருகன் சுருட்டு என்று ஆண்டவன் பெயரால் போட்டியிடுவது இப்போது எங்குமே அதிகரித்து வருகின்றதென்றும், ஜீவகாருண்யம் பேசுபவனே இறைச்சிக் கடை வைக்கிறான் என்றும் குறிப்பிட்டார்.

வித்துவான் சுப்பையா பிள்ளை பேசுகையில் விநாயகர் வணக்கமும், நம்பியாண்டார் நம்பி வாழ்வும் இணைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்ச்சியென்றார்.

திரு. மு. மயில்வாகனம் பேசும்போது ஆண்டுதோறும் திருமுறை ஊர்வலமும், நாடோறும் திருமுறைப் பூசையும் சைவபரிபாலன சபை ஆதரவில் நடைபெற ஆவன செய்யப்படும் என்றும் விரைவில் நால்வர் கோவிலும், திருமுறைக் கோவிலும் நாவலர் ஆச்சிரமத்தில் அமையும் என்றும் கூறினர்.

(கா. நி)

## தீண்டாமை ஒழிப்புச் சட்ட திருத்தம் பற்றி ஆராய ஒரு குழு

### தமிழ்ப் பாடசாலைகளாக அரசாங்கம் எடுப்பதற்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

வடபகுதியில் தமிழ்பேசும் பிள்ளைகளுக்கென ஆரம்பிக்கப்பட்ட மூன்று தமிழ்ப் பாடசாலைகளையும் சிங்களப் பாடசாலைகளாக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டதை இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி வரவேற்கிறதென்றும் இதே சமயம் தமிழ்ப்பிள்ளைகளுக்கு சிங்களத்தைப் போதனுமொழியாக்கும் முயற்சியை தீவிரமாக எதிர்ப்பதென்றும் தமிழரசுக்கட்சியின் மத்திய செயற்குழு நேற்றுத் தீர்மானித்தது.

செயற்குழுக் கூட்டம் முடிந்ததும் கட்சிப்பொதுச் செயலாளர் திரு அ அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்தார்.

அந்த அறிக்கை வருமாறு:-

தமிழ் பேசும் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட 3 தமிழ் பாடசாலைகளையும் சிங்கள ... பாடசாலைகளாக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டதை இலங்கைத் தமிழரசுக்கட்சி வரவேற்கின்றது. அங்கு கடமையாற்றும் ஆசிரியர்களையும் அரசாங்க ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கட்சி கோருகின்

## இஸ்ரேல் நேசக்கரம் நீட்டுகிறது

டெல்அவிவ், மே 33


ஐக்கிய அரபுக் குடியரசுத் தலைவருடன் சமாதானப் பேச்சுவர்த்தை நடத்த இஸ்ரேல் தயாராக இருப்பதாகவும் இப் பேச்சுவார்த்தை கெய்ரோவில் நடைபெற வேண்டுமென விரும்பினுல் அங்குகூட நடத்தலாமெனவும் இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மேயர் தெரிவித்துள்ளார்.

## பெண் அட்டெண்டனுக்கு கத்திக்குத்து

### சந்தேக நபரும் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், சனி

பெண் அட்டெண்டண்ட் ஒருவரைக் கத்தியால் குத்திய ஆண் அட்டென்டண்ட் ஒருவர் தானும் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்ய எத்தனித்தாராம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்பட்ட ''நம்பியாண்டார் நம்பி'' திருநாளில் திரு சோமசுந்தரம் செட்டியார் மேலும் பேசுகையில் ஒரு வர்த்தகர் விநாயகர் சுருட்டு என்று பெயரிட்டால் மற்றொரு வர்த்தகர் முருகன்

சபை ஆதரவில் நடைபெற ஆவன செய்யப்படும் என்றும் விரைவில் நால்வர் கோவிலும், திருமுறைக் கோவிலும் நாவலர் ஆச்சிரமத்தில் அமையும் என்றும் கூறினுர். (கா. நி)

செயற்குழுக் கூட்டம் முடிந்ததும் கட்சிப்பொதுச் செயலாளர் திரு அ. அமிர்தலிங்கம் பத்திரிகைகளுக்கு ஓர் அறிக்கை விடுத்தார்.

அந்த அறிக்கை வருமாறு:- தமிழ் பேசும் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட 3 தமிழ் பாடசாலைகளையும் சிங்களப் பாடசாலைகளாக்கும் திட்டத்தை அரசாங்கம் கைவிட்டதை இலங்கைத் தமிழரசுக்கட்சி வரவேற்கின்றது. அங்கு கடமையாற்றும் ஆசிரியர்களையும் அரசாங்க ஆசிரியர்களாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று கட்சி கோருகின்றன.

தமிழ்ப் பிள்ளைகளுக்கு தமிழ் போதனு மொழியென்பது கல்வி வெள்ளை அறிக்கை மூலம் அரசாங்கம் ஒப்புக் கொண்ட கொள்கையாகும் நாம் அரசாங்கத்தில் இருந்த நேரத்தில் ஏற்றுக் கொண்ட இக் கொள்கையிலிருந்து இன்று அரசாங்கம் வழுவ முயற்சிப்பதை கல்வியமைச்சின் அறிக்கை காட்டுகின்றது. அரசாங்கத்தின் இம் முயற்சியை கட்சி வன்மையாகக் கண்டிப்பதோடு எக்காலத்திலும் தமிழ்ப் பிள்ளைகளுக்கு சிங்களத்தைப் போதனு மொழியாக்க முயற்சித்தால் அதை எதிர்த்து தீவிர

(4-ம் பக்கம் பார்க்க)

## விமானம் கடத்தப்பட்டது

வாஷிங்டன், மே23

அமெரிக்க போக்குவரத்து விமானமொன்றை இனம் தெரியாத ஒருவர் கடத்திச் சென்றுவிட்டதாகவும், அதைக் கண்டுபிடிப்பதில் ஜெட்விமானங்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டது.

அது கடத்திச்செல்லப்பட்டபோது 9 மணி நேரத்துக்குப் போதுமான எரிபொருள் இருந்ததாகவும் அது எங்கே சென்றுள்ளது என எதுவித தகவலும் கிடைக்கவில்லையென்றும் கூறப்பட்டது.

# 'தமிழர்களிடையே பிரிவினையை உண்டாக்க அரசாங்கம் முயற்சி'

## —உடுவில் எம். பி.

யாழ்ப்பாணம், சனி

'சிறுபான்மைத் தமிழ்மக்களின் நலன்கருதி அரசாங்கம் வடபகுதியிலுள்ள பௌத்த பாடசாலைகளைப் பொறுப்பேற்கவில்லை. தமிழர்களிடையே பிரிவினையை உண்டாக்கி, தமிழ்மக்களின் ஒற்றுமையை சிதறடிக்க வேண்டும் என்பதற்காகவே அரசாங்கம் இம் முயற்சியை மேற்கொள்கின்றது'.


இவ்வாறு பௌத்த பாடசாலைகளை சுவீகரிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கூட்டத்தில் திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டார்.

மேலும்அவர்பேசுகையில், சிறுபான்மைத் தமிழ்மக்கள் தங்கள் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகவும், தங்கள் இனத்தைச்சேர்ந்த படித்த வாலிபர்களுக்கு வேலைவழங்குவதற்காகவுமே இப் பாடசாலைகளை ஆரம்பித்தார்கள். தமிழ்போதனுமொழியாக இருக்கவேண்டும் என்றே இவைகள் ஆரம்பிக்கப்பட்டன. இங்குகல்விகற்கும் மாணவர்க்கும், கற்பிக்கும் ஆசிரியர்கட்கும் தமிழ் தவிர வேறு எந்த மொழியுமே தெரியாது.

அரசாங்கத்தின் புதிய உத்தரவின் படி எதிர்வரும் முதலாம் திகதி இப்பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்படும்போது இங்கு சிங்களம்தான் போதனுமொழி. அத்துடன் பௌத்தம் கட்டாயபாடம். இந்த இரண்டு நோக்கங்களும் இப்பாடசாலைகளை ஆரம்பித்த பெற்ருேர்களுக்கு இருந்ததல்ல இது அரசாங்கம் திட்டமிட்டுச் செய்யும் ஒரு சதியாகும்என்ருர்.

திரு. அமிர்தலிங்கம் பேசுகையில், இப்பாடசாலைகளை தமிழிலே போதனுமொழியென்ற ரீதியில் அரசாங்கம் பொறுப்பேற்பதை தமிழரசு எதிர்க்கவில்லையென்றும், இங்கு சிங்களம் போதனுமொழியாக வந்தால் எதிர்த்தே தீருவோம் என்றும் கூறினுர்.

திரு எச். எக்ஸ். மார்ட்டின், என். அன்ரனி, திரு. ஆசீர்வாதம் ஹென்றி ஆகியோர் உட்படப் பலரும் பேசினர். (கா. நி.)



யாழ்ப்பாணத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் நடந்த சேக்கிழார் விழாவில் கலந்துகொள்ள வந்த பேராசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளையை சேக்கிழார் மன்றத்தினர் பலாலி விமானநிலையத்தில் வரவேற்றபோது எடுத்த படம் இது. படம்:-ஏ. வி. எம்.

யாழ்ப்பாணம், சனி

பெண் அட்டெண்டண்ட் ஒருவரைக் கத்தியால் குத்திய ஆண் அட்டெண்டண்ட் ஒருவர் தானும் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்ய எத்தனித்தாராம்.

இந்தச் சம்பவம் காங்கேசன்துறை ஆஸ்பத்திரியில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இச்சம்பவத்தினுல் கத்திக் குத்தில் காயமடைந்த பிலோமினு, யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்ய முயன்ற ஆண் அட்டென்டனும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (கா. நி)

ஆழ்கடலில் படகு

# பிரயாணிகளுடன் தண்ணீர் கோலியது

நெடுந்தீவு, சனி

1937-ம் ஆண்டு அரசினரால் கட்டப்பட்டு நெடுந்தீவு — ஊர்காவற்றுறைப் படகு சேவையில் விடப்பட்ட 'சில்வஸ்பிறே'மோட்டார்படகு இன்றைய நிலையில் மிகவும் பழுதடைந்ததாகக் காட்சியளிக்கிறது.

32 வருடங்களாகச் சேவையில் ஈடுபட்டிருந்த இந்தப்படகு நேற்றைய தினம் பல பிரயாணிகளுடன் கடலில் மூழ்ப்பார்த்ததாகவும், தண்ணீர் கோலி ஆபத்தான நிலையில் குறிகாட்டுவான் துறைமுகத்தை அடைந்ததாகவும் கூறப்பட்டது.

இப்படகு எஞ்சின் துப்பரவு செய்தும் சீர்படுத்திக் கொண்டும் பிரயாணசேவையில் ஈடுபடுவதற்காக குறிகாட்டுவான் வந்துகொண்டிருந்தசமயம், 'லோஞ்' பக்கங்களுக்கு சிந்து தண்ணீர் கோலாது பாதுகாப்புக்காக வைத்திருக்கும் சமநிலைப்பலகை உடைந்து சிப்பந்திகளும் லோஞ்சியும் ஆபத்தான நிலைமையில் குறிகாட்டுவானுக்குவ துசேர்ந்தார்கள்.

நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுசேவையில் மீண்டும் ஒரு மோட்டார்லோஞ் ,,இராசேஸ்வரி'' மட்டும்தான்சேவையிலீடுபட்டு வருகிறது.

நெடுந்தீவிற்கென பொது மராமத்து இலாகாவால் ஒதுக்கப்பட்ட மோட்டார் லோஞ்சிகளான 'இராஜேஸ்வரி', 'சில்வஸ்பிறே', 'அலையரசி', 'எல்லாளு' ஆகிய நான்கு மோட்டார் லோஞ்சிகளில் 'இராஜேஸ்வரியை விட ஏனைய மூன்று மோட்டார் படகுகளும் பழுதடைந்து கிடக்கின்றன.

பொதுமராமத்து இலாகா தனது முழுக் கவனத்தையும் செலுத்தி இந்த மோட்டார் படகுகளைத் திருத்தாவிட்டால் கூடிய கெதியில்நெடுந்தீவுமக்கள் பிரயாணக் கஷ்டத்தை அனுபவிக்கவேண்டியநிலை ஏற்படும்.

தற்போது ஒருநாளில் இரண்டுதடவைகள் மட்டும் சேவையிலீடுபட்டு வரும் 'இராஜேஸ்வரி' மோட்டார் லோஞ் செவ்வாய்க்கிழமைகளில் ஓய்வெடுத்துக்கொள்ளுவதால் அன்றையதினம் பிரயாணிகள் பெருங் கஷ்டமடைகிருர்கள்:

## பாராட்டு

யாழ்ப்பாணம், சனி

வித்தியோதய பல்கலைக்கழகத்தில் இந்து சமயம் உட்பட பல்வேறு சமயங்களையும் பாடமாக ஏற்றுக்கொண்டதற்காக அதன் தமிழ்த் துறைத் தலைவரான ஜனுப் எம். எம். உவைஸீக்கு, சைவபரிபாலன சபையின் பரீட்சைக் காரியதரிசியான சைவப் புலவர் க. கணபதிப்பிள்ளை பாராட்டுத் தெரிவித்துள்ளார். (கா. நி)

## தேசீய விவசாயிகள் வாரம்

யாழ்ப்பாணம், சனி

அகில இலங்கை கிருஷிகபண்ணைத் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் இவ்வாரம் தேசிய விவசாயிகள் வாரமாகக் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாரத்தின் இறுதி நாளான இம்மாதம் 29-ம் திகதி தேசிய விவசாயிகள் தினம் திருநெல்வேலி மார்க்கட் சதுக்கத்தில் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் கொண்டாடப்படும்.

நெல் உற்பத்தியை மையமாக வைத்து இவ்வாரத்தில் தெரியப்படும் வடமாநில விவசாய மன்னர்கள் இவ்விழாவில் வைத்துக் கௌரவிக்கப் படுவார்கள். முதலாவது விவசாய மன்னருக்கு ''ஜீ. ஜீ. தங்கப்பதக்கம்'' வழங்கப்படும்.

யாழ். மாவட்ட விவசாய மன்னர் திரு. என். கே. நல்லதம்பி உடுப்பிட்டி எம். பி. யும் உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம், வவுனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் ஆகியோர் இவ் விழாவில் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (கா. நி)

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழா

# அலங்காரவர்த்தகபவனியும், விநோத உடைப்போட்டியும் ஜுன் 14-ல்

# 'மர்ம மனிதன்' யார்? 100 ரூபா பரிசு

யாழ்ப்பாணம், சனி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி நடைபெறும் 3 நாள் பெருவிழாவில இறுதிநாள் காலை நிகழ்ச்சிகளில் அலங்கார வர்த்தகபவனி மிகவும் சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

இறுதி நாளாகிய அடுத்த மாதம் 14-ம் திகதி அதிகாலை ஆரம்பமாகும் மரதன் ஓட்ட ஆரம்பத்தைத் தொடர்ந்து 'ஈழநாடு' காரியாலய வாசலிலிருந்து மங்கள வாத்திய இசையுடன் இவ்ஊர்வலம் புறப்படும்.

இவ்ஊர்வலம் யாழ். நகரின் பிரதான வீதிகள் வழியாக சுற்றிவந்து நண்பகலில் கோட்டை மைதானத்தை வந்தடையும். இவ்ஊர்வலத்தில் அழகாக அலங்கரிக்கப்பட்ட; கவர்ச்சிஉடையணிந்த, நகைச்சுவைமிக்க காட்சிகளைத் தாங்கிய பல வாகனங்கள்இடம்பெறவிருக்கின்றன.

வர்த்தக நிறுவனங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள், இசைக்குழுக்கள், இலக்கிய விளையாட்டுக் கழகங்கள் ஆகியன பங்குபற்றுகின்றன. விண்ணப்பங்கள் ஏராளமாக இதுவரை வந்திருப்பதினுல் இனிமேல் வரும் விண்ணப்பங்களை பத்திரிகையில்வரும் இதற்கான 'கூப்பனில்' அனுப்புமாறு யாவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்ருர்கள்

இந்த ஊர்வலத்தில் இதற்குத் துணை நிகழ்ச்சியாக ஒரு விநோத உடைப்போட்டியும் ஒழுங்குசெய்யப்பட்டிருப்பதும் நேயர்கள் அறிந்ததே. விநோதஉடைப்போட்டியில் கலந்து கொள்வோர் வாகனங்களிலோ, அல்லது நடந்தோ இவ்ஊர்வலப் பாதைவழியே வரவேண்டும் என்பது ஒரு முக்கிய நிபந்தனையாகும்.

விநோத உடைப் போட்டியில் கலந்துகொள்வோர் விண்ணப்பம் செய்ய அவ்வப்போது 'ஈழநாட்டில்' வெளிவரும் விண்ணப்பப் பத்திரத்தைப் பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்ருர்கள்.

வர்த்தக பவனியில் மிகவும் சிறப்பாக அலங்கரிக்கப்பட்ட முதல் மூன்று வாகனங்களுக்கும் விலையுயர்ந்த பரிசில்களை வழங்க வர்த்தக நிறுவனங்களே முன்வந்துள்ளன. விநோதஉடைப்போட்டியில் மூன்று பரிசில்களும் ஒரு ஆறுதல் பரிசும் வழங்கப்படும். பரிசுகள் ஊர்வலம் செல்லும் பாதை ஆகிய விபரங்கள் விரைவில் ஈழநாட்டில் வெளியிடப்படும்.

இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களின் முடிவு திகதி 5 6-69 அனுப்பவேண்டிய முகவரி செயலாளர், அலங்கார ஊர்வலக்குழு, 'ஈழநாடு' அலுவலகம் த. பெ. எண்: 49, யாழ்ப்பாணம்.

இப்போட்டிகளின் முடிவு பற்றி நடுவர்களின் தீர்ப்பே இறுதியானதாகும். ஊர் அனைத்தும் திரண்டு களிகொள்ளும் இக்கோலாகல வைபவம் 'ஈழநாடு' பத்தவது ஆண்டு நிறைவு விழ நிகழ்ச்சிகளின் சிகரமா விளங்குவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

## ஈழநாடு மர்ம மனிதன்

**இதே ஊர்வலத்தில் 'ஈழநாடு' மர்ம மனிதனும் கலந்துகொள்வார். அவரை முதலாவதாகத் தேடிக் கண்டுபிடிக்கும் நபருக்கு ரூபா100 ரொக்கப் பரிசாக அன்று மாலை திறந்த வெளியரங்கில் நடைபெறும் 'ஈழநாடு' கலைவிழாவில் வழங்கப்படும்.**

'ஈழநாடு' மர்ம மனிதன் யார் என்பதை அறியவும், பரிசைப் பெறவும் 'ஈழநாடு' பத்திரிகையைத்தொடர்ந்து படியுங்கள். (கா. நி:)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

பரந்தன் முல்லைத்தீவு ரோட்டில் தென்னம்பிள்ளைக் குரியகாணி 10 ஏக்கர். தேவைப்பட்டோர் விபரங்களுக்கு எழுதுக, விளம்பர இல. 1149 'ஈழநாடு' மேற்பார்த்து யாழ்ப்பாணம். 1149

## விற்பனைக்கு

மோட்டார் லோஞ் மரேன் "பி-சிக்ஸ்" 6 சிலிண்டர் பேக்கின் என்ஜின் இரண்டும், 36 அடி நீளமுள்ள வள்ளமும் விற்பனைக்கு இருக்கின்றது. கா. க. விசுவலிங்கம், 170, கஸ்டம்ஸ் ரோட், திருக்கோணமலை. 1145

## தேவை

விஞ்ஞான கணித பாடங்கள் G. C. E. O/L A/L வகுப்புகளுக்குப் போதிக்க ஆசிரியர்கள் தேவை. 29-5-69-ம் திகதி காலை 10 மணிக்கு நேரில் வரவும். ஆனந்தாக் கலைக் கல்லூரி சுன்னாகம். 1148

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 24—5—69

(செய்திகள் காலை 7-00 பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

**344 மீ அன் 61 மீ**

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 தொழிலாளர்கேட்டவை, 1-00 படப்பாட்டு, 1-30 செய்திச் சுருக்கம்.

**344 மீ அன் 49 மீ**

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 ஆங்கில வகுப்பு, 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 வளரும்பயிர், 5-45 படத்திலிருந்து.

இரவு 6-15 இசைப் பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்நாடகஇசை, 7-35 விளையாட்டுவிவிழா, 7 45 வாத்தியஇசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ் [illegible]

## NOTICE

In the District court of Jaffna Muthiah Balasingham of Puloly East, PointPedro.
Plaintiff

No. P 1222 Vs.

1. Sinnathamby Selladurai of Puloly East, Point Pedro.
2. Yogeswary daughter of Ponniah Kathiresu of Thirunelvely East.
3. Kandiah Arumugam.
4. and wife Sinnappillai of nallur Jaffna.

Defendants

To:

It is hereby notified that action No. P. 1222 has been instituted in the District court of Jaffna under the partition act No. 16 of 1951 for the partition/ sale of the land called Thillainathan Wa'awu Suntharan Walawu in extent 6 Lms. Vc. 7 1/2 kulies and situated at Thirunelvely in the parish of nallur in the division and district of Jaffna.

The defendants in the aforesaid action are summoned to appear in Court on the 5th day of June 1969 at 10 O' clock of the foernoon.

By order of Court,
S Periathamby.
Clerk of the court.

This 7 th day of May 1969.
Drawn by
T. Ponnambalam.
Proctor for Plaintiff. 1418


ராஜா 131 வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா, போயா 2-30 மணி
சிவாஜி-மாலினி நடித்த
சபாஷ் மீனு

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி-ஜெயலலிதா நடித்த
கலாட்டா கல்யாணம்

MANOHARA
JAFFNA
Daily
4-45 7-00 & 9-45 P.M.


டாக்டர் பந்துல பெரேரா கொலை வழக்கு விசாரணை விபரம்

# "நாங்கள் கதைப்பதற்காக காரை சில நிமிடங்கள் நிறுத்தினர்"

## செல்வி ஹிராந்தி சில்வா சாட்சியம்

கொழும்பு, வெள்ளி

கொழும்பு விக்டோரியா பூங்காவுக்குச் சமீபத்தில மோட்டார்காரில் வைத்து ஏப்ரல 24-ம் திகதி நள்ளிரவில 23 வயதான டாக்டர் பந்துல பெரேரா என்பவரைக் குத்திக் கொலை செய்தது சம்பந்தமாக கைது செய்யப்பட்டோர் மீதான விசாரணை கொழும்பு பிரதம மாஜிஸ்டிரேட் திரு. பி. ஜி. எஸ். டேவிட் முன்னிலையில் ஆரம்பமாகியது.

டாக்டர் பந்துலபெரேரா குத்திக் கொலைசெய்யப்பட்ட அன்றிரவு அவருடன் காரில் இருந்த அவரது சிநேகிதி, 20 வயதான முன்னைநாள் ஏர்சிலோன் பணிப்பெண் செல்வி ஹிராந்தி டி. சில்வா சாட்சியமளித்தார். இவரது சாட்சியத்தைக் கேட்கவும், இவரைப் பார்க்கவும் நீதிமன்றத்தின் உள்ளும் புறமும் பெரும் கூட்டம் கூடி நின்றது. நீதிமன்றத்தினுள்ளும் இந்த வழக்கு விசாரணையைக் கேட்பதற்காக ஏராளமான வழக்கறிஞர்களும் வந்திருந்தனர்.

தூய வெண்ணிற ஆடையணிந்து, வெகுவான அலங்காரமெதுவுமில்லாது நீதிமன்றத்திற்கு வந்திருந்த செல்வி ஹிராந்தி டி.சில்வா சாட்சியமளிக்க அதிகாலையில் முன்வந்தபோது. முதலாவது எதிரி எஸ். முத்தையா, இரண்டாவதுஎதிரி ஆறுமுகம் சுப்பிரமணியம் ஆகியோரின் சார்பில் முறையே ஆஜரான வழக்கறிஞர்கள் யூ. எல், எம், பாரூக், இ. விவேகானந்தன் ஆகியோர், செல்வி ஹிராந்தி டி. சில்வா பொலிசாருக்குக் கொடுத்த வாக்குமூலங்களின் பிரதிகள் தங்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை என்று தெரிவித்து, அந்த வாக்குமூலங்களின் பிரதிகள் கொடுக்கப்படும்வரை செலவி ஹிராந்தி டி. சிலவாவின் சாட்சியத்தை ஒத்திப் போடும்படி கேட்டுக்கொண்டனர்.

எதிரிதரப்பு வழக்கறிஞர்களுக்கு பொலிஸ் வாக்குமூலங்களின் பிரதிகள் ஏன் இதுவரை கொடுக்கப்படவில்லை என்று வழக்கைப் பதிவுசெய்த கும்பெனித் [illegible]

இரவு 9 மணியளவில நான் டாக்டர் பந்துலபெரேராவுடன் புறப்பட்டு கிரியுல்லை வீதியிலுள்ள அவரது வீட்டுக்குச் சென்றேன். அங்கிருந்து டாக்டர் பந்துல பெரேராவின் தாயார் வரவில்லையாதலால் தங்கையை மட்டும்அழைத்துக்கொண்டு ஓட்டல் தப்ரபேனுக்கு இரவுச்சாப்பாட்டிற்குச் சென்ரேம். இரவு 10-45 மணியளவில் சாப்பிட்டுவிட்டு அங்கிருந்து புறப்பட்டு, டாக்டர் பந்துல பெரேராவின் தங்கையை அவரது வீட்டில் இறக்கிவிட்டு, எங்கள் இருவருக்கும் நண்பரான டாக்டர் ரொத்வெல் என்பவரைப் பார்க்கச்சென்ரேம். டாக்டர் ரொத்வெல் பார்க் பிளட்ஸில் தங்கியிருந்தார். போகும்வழியில் கொழும்பு நகரசபைக் கட்டிடத்திற்கும், விக்டோரியாப் பூங்காவுக்கும் இடையில் உள்ள எவ். ஆர். சேனநாயகா மாவத்தையில் தெரு விளக்குகள் நிறைந்த, பிரகாசமான அந்த இடத்தில் காரை நிறுத்திவிட்டு, சுமார் ஐந்து அல்லது 10நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்தோம்.

### திடீரென காரில் ஏறினர்

திடீரென டாக்டர் பந்துல பெரேரா திரும்பிப் பார்த்தார். நானும் பார்த்தேன் எனது பக்கத்தில் உள்ள கதவைத் திறந்துகொண்டு பின்புற சீட்டில் ஒருநபர் ஏறுவதைக்கண்டேன். காரில் ஏறிய நபர் வெள்ளை சாரமணிந்து பிரவுன் நிற சட்டையை வெளியே அணிந்திருந்தார்.

"இந்தப்பயல்கள் புகுந்து விட்டான்கள்; நாம் போவோம்," என்ரேு, அந்தக் கடுத்துப்படவோ டாக்டர் சொல்லிவிட்டு, உடனடியாகக் காரை ஓட்ட ஆரம்பித்தார். இதே வேளையில், காருக்கு வெளியேயும் இன்னொரு நபர், டாக்டரைக் காரை ஓட்டவிடாமல் ஸ்டியரிங் [illegible] கரத்தைப் பிடித்துக் கொண்டு ஓடிவருவதைக் கண்டேன்.

### சங்கிலி அறுந்தது

கார் ஓட [illegible] காரி[illegible] இருந்த முதலாம் எதிரி (முத்தையா) நபர் இடு [illegible]

கீழே விழுந்துவிட்டேன். பின் எழுந்து ஓடினேன், ஓடும்போது திரும்பிப்பார்த்தேன். முதலாம் எதிரி முத்தையா காரிலிருந்து இறங்கி வேருெரு திசையில் ஓடுவதைக் கண்டேன்.

ஸ்டியரிங்கைப் பிடித்துக் கொண்டு ஓடிவந்தவரைப் பற்றி நான் கவனிக்கவில்லை. கார் மெதுவாகத்தான் ஓடிக் கொண்டிருந்தது.

நான் டாக்டர் ரொத்வெல்லின் வீட்டுக் கதவைத் தட்டினேன். பதில் கிடைக்கதுபோக வ ஜன்னல்களைத்தட்டினேன். பின்பு வந்து கதவோரத்தில் இருந்த பணியை அடித்தேன். இந்தச்சமயத்தில் டாக்டர், பந்துல பெரேராவும் கதவண்லடயில்வந்து, 'நோமன்', நோமன்' என்று சத்தமிட்டுக்கொண்டே கீழே பிரக்ஞையுற்று விழுந்தார். அவர் தலைதயத்தூக்கிப் பார்த்தேன்; கீழே இரத்தம் வழிந்து நிரம்பியிருந்தது.

இதற்குள் அந்தப் 'பிளாட்டி'லிருந்து வேறுபலரும் வந்துவிட்டனர். டாக்டர் பெரேராவை உள்ளே தூக்கிச்சென்ரேம். டாக்டர்கள் திரு. உந்து கொடகே, திருமதி உந்து கொடகே இருவரும் வந்துபார்த்து விட்டு, டாக்டர் பந்துலபெரேராஇறந்து விட்டதாகச் சொன்னுர்கள் அதற்கப்புறம் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது. நான் பிரக்ஞை இழந்தேன் ''

பிரதம மாஜிஸ்திரேட்திரு பி.ஜீ எஸ். டேவிட் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளித்து செல்வி சில்வா கூறியதாவது:—

நான் காரை விட்டு இறங்கும்வரைக்கும் டாக்டர் பெரேராவுக்கு யாரும் எந்தத் தீங்கும் செய்ததை நான் பார்க்கவில்லை. அவர் போராடிக் கொண்டே வலியில் ஆ, ஆ, என்று கத்திக் கொண்டே கழுத்திலிருந்து கைகளை [illegible] விக்கப்பாடுபட்டார். யா[illegible]ம் தன்னை காயப்படுத்தி விட்டதாக டாக்டர் என் [illegible] கூறவில்லை காரை [illegible] செல்ல மிகவும் கஷ்டப்பட்டதால்தான் எ[illegible] இறங்கி ஓடும்படி சொ[illegible]

டது. சாப்பாடு முடிந்து திரும்பி வரும் வழியில், டாக்டரின் தங்கையை இறக்கி விட்டார் என்னையும் வீட்டில் கொண்டு போய் விடும்படி சொன்னேன். டாக்டர் ரொத்வெல்லைப் பார்க்கப் போவோம் என்ருர் நானும் இணங்கினேன்.

வழ: உமக்கும், டாக்டருக்கு மிடையிலான சிநேகம் எப்படிப்பட்டது?

செல்வி சில்வா: டாக்டர் என்னை மணக்கவும் மிகவும் விரும்பினுர்.

மாஜிஸ்: டாக்டரின் விருப்பத்தை நீர் ஏற்றுக்கொண்டு, பதிலுக்கு அவரை விரும்பினீரா?

செல்வி சில்வா, மெல்ல நகைத்தார் பதிலளிக்கவில்லை.

மாஜிஸ்: சரி, சரி, இந்த விஷயத்தில் உம்மை மௌனம் சாதிக்க விட்டு விடுகிரேும் (சிரிப்பு)

வழ: விக்டோரியாப் பூங்காவினருகே கார் ஐந்து அல்லது 10 நிமிடத்துக்குத்தான் நிறுத்தப்பட்டிருந்ததா?

செல்வி சில்வா சரியான காலத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது திகைத்து நிற்க,

மாஜிஸ்: வேறு விஷயங்களில் நீங்கள் சுறுசுறுப்பாக இருந்திருப்பீர்கள், எனவே நிதானமாகச் சொன்னுலே போதும்.

செல்வி சில்வா: ஐந்து அல்லது. 10 நிமிடங்களுக்கு மேலிருக்காது. நான் "அனே, அனே" என்று கத்திக் கொண்டுதான் இருந்தேன் அப்போதிருந்த நிலையில் என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் யாரையும் உதவிக்கு அழைக்கவில்லை. கார் எத்தனை மைல் வேகத்தில் சென்றது [illegible]

'ஈழநாடு' வெற்றிக் கேடயம்

# மகளிர் வலைப்பந்தாட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள்

யாழ்ப்பாணம், சனி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி 'ஈழநாடு' வெற்றிக் கேடயத்துக்காக கல்விப் பகுதியினரால் நடாத்தப்படும் மகளிர் கல்லூரிகளுக்கிடையேயான வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி நேற்று முன்தினம் மாலை வேம்படி மகளிர் பாடசாலை மைதானத்தில் நடத்தப்பட்டது போட்டியின் முடிவு பின்வருமாறு:-

முதலில் நடைபெற்ற மேற்பிரிவு போட்டி, முத்துத்தம்பி வித்தியாலயத்துக்கும், இந்து மகளிர் கல்லூரிக்கு மிடையில் நடைபெற்றது. இப் போட்டி ஆரம்பமாகி முடியும் வரை, முத்துத்தம்பி வித்தியாலய வீராங்கனைகள் மிகவும் வேகமாகவும், சாதுர்யமாகவும் விளையாடி 'வி்ள்ளிகளை சேகரித்தனர், இந்து மகளிர் வீராங்கனைகளும் புள்ளிகளைச் சேகரிக்க எடுத்த பல வேகமான முயற்சிகளை, முத்துத்தம்பி வித்தியாலய பின்னணி வீராங்கனைகள் முறியடித்து விட்டனர். இடைவேளையின் போது முத்துத்தம்பி வித்தியாலயம் 7 புள்ளிகளையும், இந்து மகளிர் கல்லூரியினர் 3 புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

இடைவேளையின் பின்னும் முத்துத்தம்பி வித்தியாலயம் மளமளவென 7 புள்ளிகளைப் பெற்றனர். இந்து மகளிர் கல்லூரியினர் ஆக 1 புள்ளியை மட்டுமே பெற்றனர். முத்துத்தம்பி வித்தியாலயவீராங்கனை சியாமளா புள்ளிகளைச் சேகரிப்பதற்கு வைத்த குறி ஆட்டம் முடிவடையும்வரை தவருதுவலையினுள் விழுந்தவண்ணமாமவே இருந்தது. இப்போட்டியின் முடிவில் முத்துத்தம்பி வித்தியாலயம் 14 4 புள்ளி வித்தியாசத்தில் இந்து மகளிர் கல்லூரியைத் தோற்கடித்தது.

2-வது நடைபெற்ற கீழ்ப்பிரிவு போட்டியில் இந்து மகளிர்கல்லூரி கீழ்ப்பிரிவுக்கும் கொக்குவில் இந்து கல்லூரி கீழ்ப்பிரிவுக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி மிகச்சிறப்பாகவிளையாடி இந்துமகளிர் கல்லூரியை ஆட்டமுடிவில் 10—3 புள்ளி வித்தியாசத்தால் தோற்கடித்தது.

இவ்விருபோட்டிகளுக்கும் செல்வி தர்மலிங்கமும் திருமதி ஞானனந்தனும் மத்தியஸ்தராகக்கடமையாற்றினுர்கள். தே. நி)

## 80 காணித்துண்டு 1360 பேர் மனு

யாழ்ப்பாணம், சனி

80 காணித்துண்டுகளுக்கு 1360 பேர் விண்ணப்பஞ் செய்துள்ளனர்.

பளையிலுள்ள இயக்கச்சியில் வழங்கப்படவிருக்கும் தென்னஞ் செய்கைக்கான காணித்துண்டுகளுக்கே இவ்வளவு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன

இதற்கான விண்ணப்பத் திகதி இம் மாதம் 20 துடன் முடிவடைந்தது. இங்குள்ள 2000 ஏக்கர் காணி ஒருவருக்கு தலா 25 ஏக்கர் வீதம் 80பேருக்கு பிரித்துக்கொடுக்கப்படும். ஆனுல் இதற்கு [illegible]

## இந்து இளைஞர் மன்ற உறுப்பினர்

புசல்லாவ, வெள்ளி

மலையகத்தில் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிவரும் இந்துஇளைஞர்மன்றத்தின் 9வது வருட நிர்வாகிகளாசப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்; ச. கறுப்பையா, செயலாளர்:ப.தியாகராஜா பொருளாளர்:ச.கோதண்டபாணி, பத்திராதிபர்கள்: ச.கருப்பையா, இரா.அழகர் செயற்குழு: ச.அரிதாஸ், ப. சந்திரன்,தே.புஷ்பராஜ், சு. பெரியண்ணன்.

ஆண்டுவிழாவை சிறப்புடன் கலைநிகழ்ச்சிகளோடு நடத்துவது என முடிவுசெய்யப்பட்டது. கூட்டுப்பிரார்த்தனையைதொடர்ந்து விசேஷ பூஜை நடைபெற்றது.

## வடமராட்சிக்கு வருவர்

வல்வெட்டித்துறை,வெள்ளி

இலங்கை கயரோக நிவாரண சங்கத்தலைவர் டாக்டர்ஜே.ஏச்.எவ் ஜயசூரியாவும் அவரது பாரியாரும் இம் மாதம் 25ம் திகதி வடமராட்சிக்கிளை கயரோக சங்க நிலையத்திற்கு விஜயம் செய்ய விருக்கிருர்கள்.

இவ்விஜயத்தின் போது பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண் பாடசாலையிலும், உடுப்பிட்டி மகளிர் பாடசாலையிலும் கயரோகம் சம்பந்தமான சிறப்புச் சொற்பொழி வொன்றும் நிகழ்த்தப் படும்.

## பஸ்ஸுக்கு சிறுமி பலி

கொழும்பு, வெள்ளி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

விருந்து.

இரவு 6-15 இசைப் பயிற்சி, 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னாடகஇசை, 7-35 விளையாட்டுவிழா, 7 45 வாத்தியஇசை, 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 செய்திச்சுருள், 10-00 நாதஸ்வரம், 10-30 செய்திச்சுருக்கம்.


வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி 6-30, இரவு 10-00
பிரிபோயா, போயா 10-30 மணி
எம்.ஜி ஆர்-சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

கலாட்டா கல்யாணம்

MANOHARA
JAFFNA
Daily
4-45 7-00 & 9-45 P.M.
HAMBURG
OFF LIMITS

REGAL at JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.
Julie Andrews &
Dick van duke
in
MARY POPPINS

ராணி
[யாழ்ப்பாணம்)
[தினசரி 3காட்சிகள்]
* ஜெமினி
* சாவித்திரி
நடித்த
பிரேம பாசம் (புதிய கொப்பி)

கிங்ஸ்லி (கொழும்பு) அயின் (மன்னார்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
நாகேஷ் - சுந்தரராஜன்-வசந்தா- மனோரமா
நடித்த
ஆலயம்
இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் பிளாஸா ஈமலன்
(கொழும்பு)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)


ரவிச்சந்திரன் - காஞ்சனா - நாகேஷ்
நடிக்கும்
அதே கண்கள்


போடும்படி கேட்டுக்கொண்டனர்.

எதிரிதரப்பு வழக்கறிஞர்களுக்கு பொலிஸ் வாக்குமூலங்களின் பிரதிகள் ஏன் இதுவரை கொடுக்கப்படவில்லை என்று வழக்கைப் பதிவுசெய்த கும்பெனித் தெரு பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் சில்வாவைப் பார்த்துக் கேட்ட பிரதம மாஜிஸ்டிரேட் திரு. டேவிட் "நீர் நத்தையைப்போல் நகர்ந்தால் எப்படிச் சரிவரும்; வேகமாக வேலையைச் செய்தால் என்ன?" என்று குறிப்பிட்டு, அரைமணி நேரம் வழக்கை ஒத்திவைத்தார்.

அதன்பின் 11-45 மணிக்கு வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, முடிக்குரிய வழக்கறிஞர் திரு, எல, டி. குருசாமியின் கேள்விகளுக்குப் பதிலளித்து செல்வி ஹிராந்தி டி. சிலவா. கூறியதாவது:-

## இரவு விருந்துக்கு அழைத்தார்

1969-ம் வருடம் ஏப்ரல் 24-ம் திகதி நான் ஏர் சிலோன் விமானப் பணிப் பெண்ணாக இருந்தேன். அன்றிரவு எட்டுமணியளவில் இரத்மலானை விமான நிலையத்திலிருந்து வேலை முடிந்து வீடு திரும்பியபோது டாக்டர் பந்துல பெரேரா எனது வீட்டிலிருந்தார். இரவு விருந்தொன்றுக்கு அழைத்துப்போகவே அவர் அங்கு அன்று வந்திருந்தார். எனது தாயாரிடம் என்னை அழைத்துச்செல்ல டாக்டர் பெரேரா அனுமதி கோரியபோது, இரவு விருந்துக்கு டாக்டர் பெரேராவின் தாயாரும். தங்கையும் கூட வருவதாக இருந்ததால் போக அனுமதியளித்தார்.

... ரின் ... சாரத்தைப் பிடித்துக் கொண்டு ஓடிவருவதைக் கண்டேன்.

## சங்கிலி அறுந்தது

கார் ஓட ஆரம்பித்ததும். காரி... இருந்த முதலாம் எதிரி (முத்தையா) நபர் இரு கைகளாலும் எனது கழுத்தை நெரிக்க எத்தனித்தார். நான் பலத்த சிரமத்துக்கூடாக கைகளைத் தள்ளிவிட்டேன். எனது கழுத்திலிருந்து சங்கிலி அறுந்துவிட்டது.

இதன்பின்னர் முதலாவது எதிரி முத்தையா, டாக்டரின் பின்புறத்தில் சென்று அவரது கழுத்தைப் பிடித்து நெரித்துக் கொண்டு, காரை ஓட்டவிடாமல் செய்யமுயற்சித்துக் கொண்டிருந்தார். காருக்கு வெளியே இருந்த நபரும் ஸ்டியரிங் சக்கரத்தைப் பிடித்துக் கொண்டே ஓடிவந்து கொண்டிருந்தார். கார் குறுக்குமறுக்காக ஓடிக் கொண்டிருந்தது. முதலாவது எதிரி தனது சாரத்தில் ஏதோ செய்து கொண்டிருந்தார். டாக்டர் பெரேராவுடன் போராடிக் கொண்டிருந்தார்.

கார் இப்பொழுது டரட் வீதிக்கு வந்து, பார்க் வீதி முனைக்கு வந்து விட்டது. மிகுந்த சிரமங்களுக்கிடையில்தான் டாக்டர் காரைச் செலுத்தியதால், கார் ஒரு சுவரில் மோதக்கூடியவகையில் சென்றது.

## முதல்எதிரி ஓடினார்

டாக்டர் என்னைக்காரிலிருந்து இறக்கி, டாக்டர் ரொத்வெல் வீட்டுக்கு ஓடும்படி சொன்னார். ஓடிக் கொண்டிருந்த காரிலிருந்து கதவைத் தள்ளிவிட்டு நான் இறங்கியபோது

... விக்கப்பாடுபட்டார், ... தன்னை காயப்படுத்திவிட்டதாக டாக்டர் என்னிடம்சொல்லவில்லை காரை ஓட்டிச்செல்ல மிகவும் கஷ்டப்பட்டதால்தான் எ...னை இறங்கி ஓடும்படி சொ...லியிருக்கலாம் என நான் நினைக்கிறேன்.

## குறுக்குவிசாரணை

1 வது எதிரி முத்தையாவின் வழக்கறிஞரான திரு. யூ.எல்.எம். பாரூக் செல்வி சில்வாவைக் குறுக்கு விசாரணை செய்தார். அப்போது செல்வி சில்வா கூறியதாவது:—

டாக்டர் பந்துல பெரேரைவரா எனக்கு 6மாதமாகத்தான்தெரியும் ஒரு முறை விமானத்தில்வைத்து முதன் முதலாகச்சந்தித்தேன். டாக்டரின் தாயாரும் எங்களுடன் இராச் சாப்பாட்டிற்காக ஏன்வரவில்லை என்று எனக்குத் தெரியாது. தனது மகனுடன் நான் தொடர்பு கொள்வதை அவர் விரும்பவில்லை என்று சொல்வது சரியல்ல.

வழக்கறிஞர்:- தாயார் ஏன்வரவில்லையென்று டாக்டரிடம் நீர் கேட்கவில்லையா?

முடிக்குரிய வழக்கறிஞர் - (குறுக்கிட்டு) இந்தவழக்கின் குற்றச்சாட்டுகளுக்கும் தாயாரைப்பற்றிய கேள்விக்கும் என்ன சபந்தம்?

வழ: இந்தக் கேள்விக்கு பதிலளித்தால் எந்தச் சம்பந்தம் விளங்கும். (நீதிமன்றத்தில் பலத்த சிரிப்பு)

செல்வி சில்வா: டாக்டரின் தாயாா ஏன் வரவில்லை என்று நான் கேட்கவில்லை இரண்டாண்டு கால சேவை முடிவையொட்டி இந்த இரவு விருந்து கொடுக்கப்பட்

... இருந்தேன் அப்போதிருந்த நிலையில் என்ன செய்வதென்று தெரியவில்லை. நான் யாரையும் உதவிக்கு அழைக்கவில்லை. கார்எத்தனை மைல் வேகத்தில் சென்றது என்று எனக்குச் சொல்லத் தெரியாது.

மாஜிஸ்: வானவெளியிலேயே பறந்து திரிந்த உமக்கு நிலமட்ட வேகம் தெரியாது போயிற்று போலும். (பலத்த சிரிப்பு)

செல்வி சில்வா: டாக்டர் பெரேரா என்னிடம்வெறதுவும் கூறவில்லை. தனது தங்கையை இறக்கிவிட்டு என்னை மட்டும் தனியே அழைத்துச் சென்றதில் தவறேதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை. காரை பூங்காவுக்கருகில் நிறுத்தியது சிறிதுநேரம் கதைக்கத்தான் — வேறெதற்கும் நிறுத்தியதாக நான் நினைக்கவில்லை.

அடுத்து இரண்டாவது எதிரியான ஆறுமுகம் சுப்பிரமணியத்தின் வழக்கறிஞர் திரு. இ. விவேகானந்தன் செல்வி சில்வாவைக் குறுக்கு விசாரணை செய்தார். செல்வி சில்வா கூறியதாவது:-

டாக்டரின் கார் எவ்வளவு வேகத்தில் செலுத்தப்பட்டதென்று என்னால் அறுதியிட்டுக் கூறமுடியாது. 30 அல்லது 35 மைல் வேகத்தில் செல்வதை நிதானமான வேகம் என்று நான் சொல்வேன்.

மாஜிஸ்: விமானத்தில் பறப்பவருக்கு 30, 35 மைல் வேகம் என்ன பெரிதா? (சிரிப்பு).

வழக்கறி: காரைநிறுத்தியவுடன், லைட்டுகளையும் அணைத்து விட்டாரே டாக்

(4ம் பக்கம் பார்க்க)

திகதி இம் மாதம் 20 துடன் முடிவடைந்தது. இங்குள்ள 2000 ஏக்கர் காணி ஒருவருக்கு தலா 25 ஏக்கர் வீதம் 80பேருக்கு பிரித்துக்கொடுக்கப்படும். ஆனால் இதற்கு விண்ணப்பித்துள்ள மத்திய தர வகுப்பினரோ சுமார் 1360 பேராகும். இதற்கான காணிக் கச்சேரி அடுத்த மாதப் பிற்பகுதியில் நடைபெறவிருக்கின்றது.

(கா. நி)

## பஸ்ஸுக்கு சிறுமி பலி

கொழும்பு, வெள்ளி

நான்கு வயதுச் சிறுமி இ. போ. ச. பஸ்ஸுக்குள் சிக்கித் துடிதுடித்து மாண்டாள். பள்ளம் ஒன்றுக்குள் பஸ் பாய்ந்து 5 பிரயாணிகளும் காயத்துக்குள்ளானார்கள்.

## 'ஈழநாடு' பத்தாண்டு நிறைவு விழா

# 26 மைல் மரதன் ஓட்டம்

(14—6—69)

### விண்ணப்பப்பத்திரம்

பெயர்: ..............................................

விலாசம் ..............................................
..............................................

வயது: ..............................................
1—6—69

..............................................
கையொப்பம்

### போட்டி விதிகள்

1. போட்டியில் பங்கு பற்றுபவர்கள் 1969-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் திகதியன்று 21 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும். அத்துடன் ஒரு விளையாட்டுச் சங்கத்தில் அல்லது இலங்கை A. A. A. யில் அங்கத்தவராக இருக்க வேண்டும்.

2. போட்டியில் பங்கு பற்றுபவர் ஏதாவது மருந்து குடிப்பவராக இருந்தால் விலக்கப்படத்தக்கவராக இருப்பார். உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட வைத்திய அதிகாரிகள் இவர் பங்கு பற்றக்கூடாது என்று தடுத்தால் அவர் போட்டியில் பங்கு பற்ற முடியாது.

3. போட்டியில் பங்கு பற்றுபவர் வீதி விதிகளைக் கவனித்து அதன்படி நடக்கவேண்டும்.

4. போட்டிஅமைப்பாளர்கள் வழங்கும் பானங்களைத் தவிர வேறெதையும் போட்டியில் பங்கு கொள்வோர் எடுத்துச் செல்லவோ, உண்ணவோ கூடாது.

5. போட்டியில் கலந்து கொள்வோர் ஓடும்போது காயம் ஏதாவது ஏற்பட்டால் அதற்கு போட்டி நிர்வாகஸ்தர் பொறுப்பாகமாட்டார்.

6. ஜூன் மாதம் 1-ம் திகதிக்குமுன் ஆறுமாதங்களாக தொடர்ந்து யாழ் மாவட்டத்தில் நிரந்தரமாக இருப்பவர்களே இப்போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் யாவும் ஜூன் மாதம் 5-ம் திகதிக்குமுன் 'ஈழநாடு', த. பெ எண்-49, யாழ்ப்பாணம் என முகவரியிட்டு அனுப்பப்படல்வேண்டும்.


சகலவித சேட் வகைகளுக்கு
பொகுமால்ஸ்
நினைவு கொள்ளுங்கள்
விசேட மலிவு விற்பனை

| | வ.வி. | ம.வி |
|---|---|---|
| 'டிப்ளோமற்' ரெற்றேன் கொட்டன் சேட் | 22-50 | 16-50 |
| 'டிப்ளோமற்' நைலோன் (லக்ஸறி) சேட் | 29-00 | 20-00 |
| ஸோடியக் நைலோன் புஸ் சேட் | 20-00 | 14-00 |
| ஸ்கைவே டெரலின் சேட் | 24-50 | 18-00 |
| டியூரோ டெரலின் சேட் | 29-50 | 20-00 |
| மோட்டெக்ஸ் டெரிலின் சேட் | 24-00 | 16-00 |
| டியூரோ நைலோன் 'ஸ்ரைப்' சேட் | 29-50 | 26-00 |

முக்கியமாக சேட்டு வகைகளின் விலைகள்
மிக மிகக் குறைக்கப்பட்டுள்ளன
இன்றே விஜயம் செய்யுங்கள்!
பொகுமால்ஸ்
49, பிரதான வீதி, :-: யாழ்ப்பாணம்.

"ராதா"
கிரீன் தர்பார் பத்தி
மனதிற்கு இன்பமும் மகிழ்ச்சியும் தருவது
ராதா கிரீன் தர்பார் பத்திகளே!
இலங்கையில் அதிகம் விற்பனையாவது
ராதா கிரீன் தர்பார் பத்திகளே!
தயாரிப்பாளர்கள்:
ராதா பெர்பியூமரி அன் ராதா புறடக்ஸ்
ஏகவிநியோகஸ்தர்கள்:
எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி
(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)
53, கே. கே. எஸ். றோட், பெரியகடை, யாழ்ப்பாணம்.
"பாலேந்திரா பில்டிங்" 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதன் சந்திரனில் இறங்குவதற்கு இடம் பார்த்து படம் பிடித்து விட்டார்கள்

## அமெ. அப்பலோ-10 வீரர்கள் துணிச்சல் மிக்க சாதனை

ஹவுஸ்டன்,மே.23

மனிதன் இதுவரை செல்லாத இடத்துக்கு அமெரிக்க விண்வெளி வீரர்கள் இன்று சென்றுர்கள் .சந்திரனுக்கு பத்தரைமைல் தூரத்தில் சுற்றிக்கொண்டு ஷெர்னனும் ஸ்டபோர்ட்டும் சந்திரனைப் பற்றிய விபரமான புதிய தகவல்களை தாய்க்கப்பலில் இருந்தயங்மூலம்பூமிக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள்.

### இடம் தேர்வு

அடுத்த ஜுலை மாதம் 20-ம் திகதி சந்திரனில் மனிதன் இறங்கக்கூடிய ஒருஇடத்தை தாய்க்கப்பலிலிருந்து பிரிந்து சந்திர ஊர்தியில் சென்ற இரு வீரர்களான ஷெர்னனும் ஸ்டேபார்ட்டும் தேர்ந்தெடுத்தார்கள் மனிதன் இறங்கக்கூடிய பொருத்தமான இந்தஇடத்தை இருவிண்வெளி வீரர்களும் பல தடவைகள் படம்பிடித்தார்கள். அமைதிக்கடல் என அழைக்கப்படும் இந்த இடத்தில் அதிக மேடுபள்ளங்கள் இல்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

### குழப்பம்

இன்று அதிகாலை 3 மணிக்கு தாய்க்கப்பலிலிருந்து விடுவித்துக்கொண்டு சந்திர ஊர்தி சந்திரனுக்கு சமீபமாகச் செல்லப் பயணமானபோது சிலநிமிட நேரம் குழப்பநிலை ஏற்பட்டது. பிரிந்து சென்ற சிலந்திபோன்ற வடிவமுள்ள சந்திர ஊர்தியில் சென்ற இரு விண்வெளி வீரர்களுக்கு பிராணவாயு போதாதிருந்தபோதே இந்தக் குளப்பநிலையேற்பட்டது. ஆனல் இது உடனே சரிப்படுத்தப்பட்டது. இவ்வித நிலை ஏற்பட்ட போது இரு விண்வெளி வீரர் களின் இருதயத் துடிப்புக்களும் சிறிது நேரம் பலமாக அடிக்கத் தொடங்கியது.

### "வந்து விட்டோம்"

நிலைமை சரியாகி சந்திரனுககு பத்தரைமைல் தொலைவில் சென்றபோது 'வந்துவிட்டோம் அங்கேயேவந்துவிட்டோம்' என விண்வெளி வீரர் ஷெர்னன் மகிழ்ச்சிக் கலப்புடன் வெற்றிக்குரல் கொடுத்தார்.

### 6 நிமிட நேரம்

இரு விண்வெளி வீரர்களும் அடுத்த ஜுலை மாதத்தில் மனிதன் சந்திரனில் இறங்க பொருத்தமான இடத்தை 6 நிமிடநேரம் வெகு உன்னிப்பாக பார்வையிட்டுப் படம் பிடித்தனர். சந்திர தரையில், கண் – வேறுபல காட்சிகளையும் இவர்கள் படம்பிடித்தார்கள். திரைப்படமாகவும் பிடித்தார்கள்.

துணிச்சலும் சரித்திரப்புகழ் வாய்ந்ததுமான இந்தச் சாதனைபற்றி நிலக்கட்டுப்பாட்டதிகாரிகளுக்கு உடனுக்குடன் தகவல்கள் தெரிவிக்கப்பட்டது,

### வந்திறங்கும்

கென்னடிமுனையிலிருந்து இம் மாதம் 18-ம் திகதி மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரப் பயணத்தை மேற்கொண்ட அப்பலோ - 10 விண்வெளிக் கப்பல் 26-ம் திகதி பசிபிக் பெருங்கடலில் ஹாவாய்க்குத் தென்மேற்கே சுமார் 1000 மைல் தொலைவில் வந்திறங்கும் பூமியிலிருந்து சந்திரனுக்குப் போக சுமார் மூன்று நாட்கள் சந்திரனிலிருந்து பூமி குவர இரண்டரை நாட்கள் இடையில் சந்திரனைச் சுற்றிவந்து ஆராய இரண்டரை நாட்கள் மொத்தமாக எட்டு நாட்கள் இந்த துணிச்சல் மிக்க பயணத்துக்குதேவைப் படுகிறது.

## "ஒன்று சேர்ந்து வாழாவிடில் எதிர்காலம் வாழ்வில்லை"

### சேக்கிழார் விழாவில் பேராசிரியர் ஔவை

யாழ்ப்பாணம்,சனி

"பிரிந்து செல்கின்ற மக்களை ஒன்றுசேர்க்கின்ற தன்மை சமயத்திற்கு இருக்கிறது" என்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடந்த சேக்கிழார் விழாவில் பேராசியர் ஔவை துரைச்சாமிப்பிள்ளை கூறினுர்.

திரு. எம். ஸ்ரீகாந்தா தலைமையில் நடந்த இவ்விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிகளில் பேராசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளை மேலும் கூறியதாவது:- மேல் நாட்டவர்கள் தங்களுக்குள்ளே அரசியல்வேறுபாடு இருந்தாலும் நேர்மாறுன கருத்தைக் கொண்டவர்களாக இருந்தாலும் சமயத்தால் ஒன்றுபடுகின்றுர்கள். வழிபட கோவிலுக்குச் செல்லும் போது வேறுபாடுகளை மறந்து செல்கின்றனர். சமயத்தால் ஒன்றுபடுகின்ற நிலை நம்மிடையே இல்லை என்கின்றபோது வேதனையாக இருக்கிறது. இந்நிலை மாறவேண்டும் சமயபிணைப்புத்தான் நம்மை ஒன்று சேர்க்கும்.

அரசனின் எண்ணமும், மக்களின் எண்ணமும், சமுதாயத்தின் எண்ணமும் ஒரே துறையில் சென்ற காலம் சேக்கிழார் காலம். சேக்கிழார் போல் பலபெருமக்கள் வாழ்ந்திருக்கின்றுர்கள். சுமார் 800 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த சேக்கிழார் பெருமானுக்கு மட்டுமேன்நாம் விழா எடுக்கின்றேம் அவர் வழங்கிய கருத்துக்கள் பயன் தரக்கூடியவை யென்பதால் தான்.

சேக்கிழார் காலத்தில் வாழ்ந்த சோழமன்னன் 2-ம் குலோத்துங்கன் பற்றி திருவாரூர் கல்வெட்டில் கூறப்பட்டிருக்கிறது. அக்காலத்தில் சேக்கிழார் பெருமானின் திருப்பணியையும் கல்லில் பொறித்திருக்க வேண்டும். அவை இன்னும் கிடைக்கவில்லை. நம்மிடையே உழைப்பு ஊக்கம் இல்லாததுதான் காரணம். 1903-ம் ஆண்டில் கண்டெடுத்த கல்வெட்டு இப்போ வெளிவந்துள்ளது. அதன் பின் வெளிளந்த கல்வெட்டுகளை காணமுடியவில்லை.

விஞ்ஞானம், பொருளியல் அரசியலில் உள்ள ஆர்வம் நமக்கு வரலாற்றில் செல்லவில்லை. நம்நாட்டுமக்களுக்கு வரலாறு பற்றியஊக்கம், உழைப்பு இல்லை. நாம் நூல் வாயிலாக எழுதிவைத்தவை மூலமே சேக்கிழார் பற்றி அறிந்துள்ளோம். வரலாறு மூலம்அறிந்துகொள்ளவில்லை.

சமநிலையில்இருந்து வாழ்ந்ததாலேயொழிய வாழ்வில்லை என்ற சூழ்நிலை பரவி வருகிறது. எல்லாரும் ஒரே நிலையில் நின்றுபொருளியல், உலகியல், வாழ்வை சமநிலையாக்கி கொள்ள வேண்டும். நம்மிடையே வேறுவேருன பிரிவுகள்இருந்தால் நாம் வீழ்ந்தோம்; அழிந்தோம், கருத்துவேற்றுமையின்றி ஒன்றுசேர்ந்து வாழ்ந்தாலேயொழிய எதிர்காலத்தில் நமக்கு வாழ்வில்லை.

## வேலணை இ. ச. தேர்தல் முடிவுகள்

அல்லைப்பிட்டி, வெள்ளி

வேலணைக் கிராமசபைத் தேர்தல் நேற்று நடைபெற்றது. தற்போதைய தலைவர் மு. குலசேகரம்பிள்ளை தோல்வியடைந்தார். முதலாம் வட்டாரத்தில் சடையன் கதிரவேலுவும், நான்காம் வட்டாரத்தில் சங்கரப்பிள்ளை கைலாசபிள்ளையும், ஆறும் வட்டாரத்தில் கந்தையா பத்மநாதன், நாகநாதன் ஐயம்பிள்ளை ஆகியோரும் எட்டாம் வட்டாரத்தில் சபாபதி பாலசுப்பிரமணியனும் தலா மூன்று வாக்குகளைப் பெற்றும், ஏழாம் வட்டாரத்தில் சதாசிவம் கிரிவாசன் இருபத்து நாலு வாக்குகளைப் பெற்றும் கட்டுப்பணத்தை இழந்தனர். ஒன்பது வட்டாரங்களைக்கொண்ட இக்கிராமசபையில் வெற்றியடைந்தோர் விபரம் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்: கணபதிப்பிள்ளை சதாசிவம், 2-ம் வட்டாரம்; சிவசிதம்பரம் இராமலிங்கம், 3-ம் வட்டாரம்: பொன்னையா நமசிவாயம், 4-ம் வட்டாரம்: கார்த்திகேசு இராசதுரை, 5-ம் வட்டாரம்: புத்திரங்கொண்டார் சுப்பிரமணியம், 6-ம் வட்டாரம்: முத்தன் ஆறுமுகம், 7-ம் வட்டாரம்: மருதையினுர் கனகசபாபதிப்பிள்ளை, 8-ம் வட்டாரம்: கந்தையா செல்வநாயகம், 9-ம் வட்டாரம்: ஆறுமுகம் மார்க்கண்டு.

### தேர்தல்

வல்வெட்டித்துறை,வெள்ளி

பருத்தித்துறை நகரசபை

## எட்வேர்ட் கென்னடியின் கோரிக்கை நிராகரிப்பு

லொஸ்ஏன்ஜல்ஸ், மே 23 முன்னரேயே இவ்வித மனு ரொபேர்ட் கென்னடியைச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால்

## மின்சார விநியோகம் பற்றி சாவகச்சேரி நகரசபை தீர்மானம்

மட்டுவில், வெள்ளி

"மட்டுவில் வாசிகளுக்கு மின்சாரம் தருவதாகக் கொடுத்த வாக்குறுதியின்படி நுணுவில்சந்தியிலிருந்து சரசாலை சந்திக்கூடாகச் செல்லும் பிரதான வீதியால்தான். மின்சார விநியோகத்தொடர்நீட்டப்படவேண்டும்".

இவ்வாறு ஓர் அவசரப் பிரேரணை சாவகச்சேரி நகரசபையில் நேற்றுமுன்தினம், தலைவர் சு. கனகரத்தினம் தலைமையில் நடைபெற்ற ஒரு விசேஷகூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

இந்த மின்சார விஸ்தரிப்புச்சம்பந்தமான பிரேரணையை சாவகச்சேரி நகரசபையின் 5-ம் வட்டார அங்கத்தவரான திரு. பி. ஆர். ஜெயரத்தினம் 4-ம் வட்டார அங்கத்தவர் திரு. எஸ். சிவப்பிரகாசம், 7-ம் வட்டார அங்கத்தவர் திரு. சி. பாலசிங்கம் ஆகியோர் கைச்சாத்திட்டுச் சமர்ப்பித்திருந்தனர்.

இப்பிரேரணையின் பிரள்கள் மின்சார இலாகா அமைச்சிற்கும் உள்ளூராட்சி அமைச்சருக்கும் சாவகச்சேரி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு.வி. என். நவரத்தினத்திற்கும் சுன்னுகம் மின்சாரநிலையபொறியியலாளருக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

வடபகுதி பௌத்த பாடசாலைகள்

## அரசாங்கம் கையேற்பதற்கு காங்கேசன்துறை ப. ச. எதிர்ப்பு

அளவெட்டி, வெள்ளி

"உத்தியோகமோகம் பிடித்தவர்கள் வேண்டுமென்றல் சிங்களம் படிக்கலாம். ஆனல் தமிழ் பிள்ளைகள் மத்தியில் சிங்களம் திணிக்கப் படுவதற்கு நாம் கட்டாயம் எதிர்ப்பு தெரிவிப்போம்".

இவ்வாறு காங்கேசன்துறைப் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டத்தில் கொண்டுவரப்பட்ட வடபகுதி பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பதை எதிர்க்கும் தீர்மானத்தின் மீது ஏற்பட்ட காரசாரமான விவாதத்தின் போது உரையாற்றிய 5-ம் வட்டார உறுப்பினர். திரு ச. சிவனடியார் கூறினுர்.

3-ம் வட்டார உறுப்பினர் திரு. மு. திடவீரசிங்கம் பேசுகையில் கூறியதாவது;

உத்தியோகத்தில் ஆசை கொண்ட சிலர் இப்போது சிங்களம் படித்து பின் சிறுவர்களுக்கு சிங்களம் படிப்பிக்கிறுர்கள். இது தமிழினத்துக்குச்செய்யும் பெருந்துரோகமாகும்.

4-ம் வட்டார உறுப்பினர். வே. சீனிவாசகம் பேசுகையில்:

இம்முயற்சி அரசியல் கட்சிகளின் தேர்தல் தந்திரமே தவிர மக்களுக்கு பயனளிக்கக் கூடியதாக இல்லை. என்றுர்.

சபைத் தலைவர் ஆ. வ சதாசிவம் பேசுகையில் மாவட்ட சபை மசோதா விஷயத்திலும் திருக்கோணமலை கோணேசர் ஆலய புனித நகர் விஷயத்திலும் தமிழர்களை ஏமாற்றிய அரசாங்கம் வடபகுதியில் 3 சிங்கள பௌத்த பாடசாலைகளை கையேற்று தமிழர்களை சிங்களவராக்கும் முயற்சியை நாம் வன்மையாகக் கண்டிக்கிறேம் என்றுர்.

## மாணவர் பிரச்னைகள் தீர பெற்றேர் ஆசிரியர் சந்திப்பு

நல்லூர், வெள்ளி

"சிறுவரின் வாழ்க்கையில் ஒரு நாளில் ஐந்து அல்லது ஆறு மணித்தியாலங்களே பாடசாலையிற் கழிகின்றன என்றலும் ...தற்கு பெற்றேரும் ஆசிரியரும் அடிக்கடி சந்திப்பது மிகவும் நல்லது. இதனல் பலவித தேவைகளை அறிந்து அதற்கான பரிகாரங்களை தேட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கென்னடி முனையிலிருந்து இம் மாதம் 18-ம் திகதி மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரப் பயணத்தை மேற்கொண்ட அப்பலோ - 10 விண்வெளிக் கப்பல் 26-ம் திகதி பசிபிக் பெருங் கடலில் ஹாவாய்க்குத் தென்மேற்கே சுமார் 1000 மைல் தொலைவில் வந்திறங்கும் பூமியிலிருந்து சந்திரனுக்குப் போக சுமார் மூன்று நாட்கள் சந்திரனிலிருந்து பூமி குவர இரண்டரை நாட்கள் இடையில் சந்திரனைச் சுற்றிவந்து ஆராய இரண்டரை நாட்கள் மொத்தமாக எட்டு நாட்கள் இந்த துணிச்சல் மிக்க பயணத்துக்குதேவைப் படுகிறது.

## 'ஈழநாடு'
## 10-வது ஆண்டு நிறைவு விழா
# மாணவர் பேச்சுப் போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி கீழே குறிப்பிடப்படும் விபரத்தின் பிரகாரம் ஒரு பேச்சுப்போட்டி நடைபெறும்.

**3 பிரிவுகள்:**

சிரேஷ்ட பிரிவு 1-6-69-ல் 19 வயதிற்கு கீழ்ப் பட்டவர்களுக்கு.

மத்திய பிரிவு 1-6-69-ல் 16 வயதிற்கு கீழ்ப் பட்டவர்களுக்கு.

கனிஷ்ட பிரிவு 1-6-69-ல் 12 வயதிற்கு கீழ்ப் பட்டவர்களுக்கு.

### பேச்சுக்கான விடயங்கள்:

**சிரேஷ்ட பிரிவு**

1. மக்களும் பத்திரிகைகளும். 2. தேசிய ஒற்றுமை. 3. விஞ்ஞானக்கல்வி. 4. வண. ஞானப்பிரகாசர். 5. 'ஈழநாடு' பத்திரிகை. 6. இஸ்லாமும் தமிழும். 7. கூட்டுறவும் பொருளாதார நலனும்.

**மத்திய பிரிவு**

1. உணவுஉற்பத்தி. 2. பத்திரிகையும்வாழ்க்கையும். 3. சுவாமி விபுலானந்தர். 4. 'ஈழநாடு' பத்திரிகை. 5. உமறுப் புலவர். 6. இலங்கையின் கைத்தொழில் விருத்தி.

**கனிஷ்ட பிரிவு**

1. காந்திமகான். 2. ஆறுமுக நாவலர். 3. 'ஈழநாடு' பத்திரிகை. 4. உடற்பயிற்சி. 5. எமது நாடு. 6. நபிகள் நாயகம்.

ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள்மட்டும் அனுமதிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 'ஈழநாடு' மாணவர் பேச்சுப்போட்டிக் கூப்பனில் நிரப்பப்பட்டு, தாங்கள் பயிலும் கல்லூரி அதிபர் மூலம் 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 25-5-69-ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் **10-வது ஆண்டு நிறைவு விழா பேச்சுப் போட்டி** என்று குறிப்பிடுதல் வேண்டும்

இப்பேச்சுப்போட்டி சம்பந்தமான பரிசு முதலிய விபரங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப் படும்.

**'ஈழநாடு' 10-வது ஆண்டு விழா**

**மாணவர் பேச்சுப் போட்டி**

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

பிரிவு: ..........................................

## பொலிஸ்காரர் கைது

சென்னை, மே 23

சென்னையில் ஒரு பஸ் சாரதி குத்திக் கொல்லப் பட்டது சம்பந்தமாக பொலிஸ்காரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னை தியாகராயநகர் கண்ணம்மா பேட்டையைச் சேர்ந்த முனிசாமி(30வயது) என்பவரை இவரது தம்பியும் பொலிஸ்காரருமான கண்ணன் என்பவர் குத்திக் கொலைசெய்ததாக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

## பாரத துணைப் பிரதமர் மறுப்பு

புதுடில்லி, மே 23

பிர்லா நிறுவனங்கள் அரசாங்கத்தில் விசேஷ செல்வாக்கு கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டையும் தமது சொந்த சேமிப்பு பற்றி கூறப்பட்டு வரும் வதந்திகள் பற்றியும் பாரத துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் மறுப்புத் தெரிவித்தார்.

பத்திரிகை நிருபர்களுக்களித்தப் பேட்டியொன்றில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு மறுப்புத் தெரிவித்தார்.

தமக்கெதிராக வீணுக ஒரு சிலர் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைச் சுமத்திவருவதாகவும் அவர் கூறினார்.

## ஆயிரத்துக்குமேல் விண்ணப்பங்கள்

அச்சுவேலி, செவ்.

கோப்பாய்த் தொகுதியில் இருந்து கனகாம்பிகை குளம் குடியேற்றத் திட்டத்திற்கு விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்கள் யாவும் வலி. கிழக்குக் காரியாதிகாரி கந்தோரில் அண்மையில் பரிசீலனை செய்யப்பட்டன. இத்திட்டத்தில் காணிபெற ஆயிரத்துக்கு மதிகமானவர்கள் விண்ணப்பித்திருந்தனர். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஆகஸ்ட் இறுதிப் பகுதியில் காணிகள் வழங்கப்படுமெனத் தெரிகிறது.

## எட்வேர்ட் கென்னடியின் கோரிக்கை நிராகரிப்பு

லொஸ்என்ஜல்ஸ், மே 23

ரொபேர்ட் கென்னடியைச் சுட்டுக்கொலை செய்த ஷிரான் என்ற இளைஞனுக்கு மரணதண்டனை விதிக்காது கருணை காட்டும்படி ரொபேர்ட்கென்னடியின் இளைய சகோதரரான எட்வேர்ட் கென்னடி விடுத்த கோரிக்கையை லொஸ்என் ஜல்ஸ் நீதிமன்ற நீதிபதி நிராகரித்தார். இந்த மனு கடைசி நேரத்திலேயே கிடைத்ததால் இதுபற்றி ஆலோசிக்க அவகாசம் கிடைக்காதுபோய்விட்டதாக அவர் தெரிவித்தார்.

முன்னரேயே இவ்வித மனு சமர்ப்பிக்கப்பட்டிருந்தால் ஜூரர்களின் தீர்ப்பு வேறு விதமாக இருந்திருக்கலாம் என்றும் நீதிபதி எடுத்துக் கூறினார்.

தமது சகோதரரான ரொபேர்ட்கென்னடி தமக்காக இன்னொரு உயிர் மடிவதை விரும்பமாட்டார் எனவும் திரு. எட்வேர்ட் கென்னடி இந்த மனுவில் தெரிவித்திருந்தார். ஷிரானின் மரணதண்டனை விஷவாயு அறையில் அடைத்து நிறைவேற்றப்படும்.

## ஆந்திர பிரதேச
# மழை, புயலுக்கு 350 பேர் பலி

விஜயவாடா மே 23

ஆந்திரப்பிரதேசத்தில்ஒரு வாரமாகப் பெய்த பெரு மழையும் வீசிய புயலும் இதுவரை350பேரைப் பலி கொண்டுவிட்டது.

ஆயிரக்கணக்கான மக்கள் வீடிழந்து தவிக்கின்றனர். பலர் உணவின்றி வாடுகின்றனர். விமானப்படையினர் விமானமூலம் போட்ட உணவுப் பொட்டலங்கள் சில இடங்களில் காற்றின் வேகத்தால் பசியோடு காத்திருந்த மக்களுக்கு கிடைக்காது போய்விட்டதாகத் தெரிகிறது.

நிவாரண வேலைகளிலும் மீட்பு வேலைகளிலும் முப்படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

பிரதமர் திருமதி இந்திரா பிரதமர் உதவி நிதியிலிருந்து ஒருலட்சம் ரூபா நிவாரணம் வழங்குவதற்கென அனுப்பிவைத்துள்ளார்.

ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு. பிரமானந்த ரெட்டி நிலைமைகுறித்து கவலை தெரிவித்து அவதிப்படும் மக்களுக்கு உடன் நிவாரணம் வழங்க முன்வருமாறு சகலருக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**'ஈழநாடு'**

**கட்டுரைப் போட்டி**

**கட்டுரை தலைப்பு:** ..........................................

..........................................

பெயர் : ..........................................

விலாசம் : ..........................................

பிரிவு: ..........................................

ரம்: கந்தையா செல்வநாயகம், 9-ம் வட்டாரம்: ஆறுமுகம் மார்க்கண்டு.

## தேர்தல்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை நகரசபையின் 7ம் வட்டார உப தேர்தலுக்கானநியமனப் பத்திரத்தாக்கல் நகரசபை மண்டபத்தில் மாவட்ட உதவி தேர்தல் அதிகாரி தலைமையில் நடை பெற்றது.

கந்தையா தியாகராசா அடையாளம்(மணி)நாகலிங்கம் சுந்தரலிங்கம்(சேவல்) கணபதிப்பிள்ளை விநாசித்தம்பி (கண்) ஆகிய மூவரும் போட்டியிடுகின்றனர்.

0 0 0

புலோலி கிராம சபைக்கு 4ம் வட்டாரத்திற்கு கந்தையா சண்முகநாதன் என்பவர்போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். முன்பு 4ம் வட்டார அங்கத்தவராக இருந்து வந்த திரு. முருகமூர்த்தி மூன்று கூட்டங்களுக்கு சமூகமளிக்கத் தவறிய காரணத்தால் அந்த இடத்துக்காக நியமனத்தாக்கல் செய்யப்பட்டபோது சண்முகநாதன் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்.

## ஆட்சிமொழியை படிக்கவிரும்புகிறோம்

பருத்தித்துறை, வெள்ளி

''இந்நாட்டின் ஆட்சி மொழியை ஒளிந்து மறைந்து படிக்க நாம் விரும்பவில்லை. பகிரங்கமாகவே எமது குழந்தைகளுக்குப் போதிக்கப்படல் வேண்டுமென்று கோருகிறோம்.''

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றை கரவெட்டிப்பகுதி சிறுபான்மைத் தமிழர் சார்பாக கனுவில் சனசமூக நிலையம் கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ளது.

## பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு

நல்லூர், வெள்ளி

''சிறுவரின் வாழ்க்கையில் ஒரு நாளில் ஐந்து அல்லது ஆறு மணித்தியாலங்களே பாடசாலையிற் கழிகின்றன என்றாலும் இவ் வேளையில் ஆசிரியர்களால் இவர்களுக்கு கல்வி போதிக்கப்படுவதோடு ஒழுக்கம், பண்பு போன்ற நல்லியல்புகளையும் கற்றுக் கொள்கின்றார்கள். அவர்களின் பிற்கால வாழ்வின் முன்னேற்றத்துக்கு இவ் அரிய இயல்புகள் துணைபுரிகின்றன. பாடசாலைகளில் பயிலும் நேரம் தவிர மற்ற நேரங்களில் பெற்றோர் தமது பிள்ளைகளைப் பேணிப்பாதுகாப்பதில் கவனம் செலுத்த வேண்டும் அவ்விதம் கவனம் செலுத்தினுல்தான் பிள்ளைகளின் எதிர் காலம் நல்லதாக இருக்கும்''

இவ்வாறு யாழ்ப்பாணம் சேணியதெரு மகாவித்தியாலய அதிபர் திரு. எம். பாஸ்கரதேவன் கூறினார்.

இப்பாடசாலையின் பெற்றோர். ஆசிரியர் சங்கத்தின் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

மாணவர்களது பிரச்னைகள் பலவற்றைத் தீர்ப்பதற்கு பெற்றோரும் ஆசிரியரும் அடிக்கடி சந்திப்பது மிகவும் நல்லது. இதனுல் பலவித தேவைகளை அறிந்து அதற்கான பரிகாரங்களை தேட முயற்சி செய்யலாம். எல்லா வற்றுக்கும் அரசாங்கத்தை மட்டும் நம்பியிருக்காமல் முடிந்த வற்றைச் செய்வதற்கு பெற்றோர் ஆசிரியர் சங்கங்கள் முன்வர வேண்டும்.'

சங்கத்தின் புதுவருட உறுப்பினர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்-திரு. எம். பாஸ்கரதேவன், காரியதரிசி-திரு. கே. பொன்னுத்துரை, உபகாரியதரிசி. திரு. எஸ். இராசரத்தினம், தனாதிகாரி-திரு சி. ரி. கே. தியாகராஜா, உதவி அக்கிராசனர்கள் திரு. வி. சுப்பிரமணியம், திரு, பி. சுந்தரலிங்கம், போஷகர்-திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எம். பி. உப போஷகர்-திரு. எஸ். தணிகாசலம் (வடமாநில வித்தியாதிபதி).

நிர்வாகசபை உறுப்பினர்கள்-திருவாளர்கள் மு. மாணிக்கவாசகர், சி. சிதம்பரப்பிள்ளை, கே. நல்லதம்பி, பி. புவனேந்திரன் ரி. தியாகராசா, என். நல்லதம்பி, ஆர். அபூர்வசிங்கம், எஸ். கந்தையா, என். ரி. செல்லத்துரை.

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ தலங்காவற் பிள்ளையார் கோவில் சகஸ்ர சங்காபிஷேகமும், சனி பகவானுக்கு அஷ்டோத்ர சங்காபிஷேகமும் நேற்று முன்தினம் நடைபெற்றன. (கா. நி)

## கிராம சேவகருக்கு மீண்டும் பதவி

பருத்தித்துறை, வெள்ளி

கடந்தவருடம் கரவெட்டி கிழக்கு சிசுக்கொலை வழக்கில் எதிரிகளுள் ஒருவராகக் காணப்பட்டு தற்காலிகமாகப் பதவி நீக்கம் செய்யப்பட்ட கரவெட்டி கிழக்கு கிராமசேவகர் திரு. கே. பொன்னையா பருத்தித்துறை நீதிமன்றத்தால் நிரபராதியென விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து இம்மாதம் 20-ந் திகதியிலிருந்து மீண்டும் பதவியிலமர்த்தப்பட்டுள்ளார்.

## கொலை செய்யப்பட்ட குற்றமற்றவர் சம்பந்தமாக விசாரணை
### மலேஷிய அரசாங்கம் நடவடிக்கை

கோலாலம்பூர், மே 23

கலவரங்களின்போது கொலைசெய்யப்பட்ட குற்றமற்றவர்கள் சம்பந்தமாக விசாரணை நடைபெறுமென அரசாங்கம் அறிவித்துள்ளது. அநியாயமாகப் பலர் கொலை செய்யப்பட்டார்களா என்பதைக் கண்டறிந்து உரிய நடவடிக்கை எடுக்கவே அரசாங்கம் இவ்வித முடிவு செய்துள்ளது. இனக் கலவரங்களுக்கு காரணமாயிருந்தவர்கள்மீது கடும்நடவடிக்கை எடுக்கப்படவிருப்பதாக உள்நாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

கலவரங்களின்போது 163 பேர் மரணமடைந்ததாகவும் இத்தொகையில் 156 பேர் தலைநகரிலும் அதனைச் சுற்றியுள்ள இடங்களிலும் மாண்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதுவரை 3800 பேர். கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மலேஷியாவில் இப்போது 6 அரசியல் கட்சிப்பத்திரிகைகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இவை இனக் கலவரங்களைத் தூண்டிவிடலாமெனக் கருதப்பட்டதாலேயே இவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

## பெரியார் சிலை கருணுநிதி திறக்கிறார்

சேலம், மே 23

ஈ. வெ. ரா. பெரியார் சிலை திறப்புவிழா நாளை தர்மபுரியில் நடைபெறவிருக்கிறது. தமிழக முதலமைச்சர் திரு மு. கருணுநிதி பெரியார் சிலையைத்திறந்து வைக்கிறார். இந்த விழாவில் ஈ. வெ. ரா. பெரியாரும் கலந்துகொள்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

*மலையளவு சொல்லைவிட கடுகளவு செயல் எவ்வளவோ சிறந்தது*

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம் 11-ந் திகதி (24-5-69)


## நிர்வாக சேவை சீர்திருத்தம்

இலங்கையின் நிர்வாக யந்திரம் தாமதமின்றி சீர்திருத்தி அமைக்கப்படவேண்டுமென்றும் இதற்கென பணிக்குழுவொன்று அமைக்கப்படவேண்டுமென்றும் டாக்டர் பானர்ஜி என்னும் இந்திய நிர்வாகசேவை வல்லுனர் இலங்கை அரசாங்கத்துக்குச் சிபார்சு செய்திருக்கிறார். இந்தச் சிபார்சை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமென்றே எதிர்பார்க்கலாம்.

இலங்கை நிர்வாகசேவையின் பெயர்தான் மாற்றப்பட்டிருக்கிறதேயொழிய நிர்வாக யந்திரம் மாற்றியமைக்கப்படவில்லை. அந்நிய ஆட்சியின்போது அவர்கள் தமது தேவைக்கும் வசதிக்குவேற்ப அமைத்துக்கொண்ட நிர்வாக இயந்திரம்தான் இலங்கை அரசியல் விடுதலையடைந்து இருபத்தொரு வருடங்களாகியும் செயல்பட்டுவருகிறது. எந்த ஓர் அரசியல் கட்சியோ கூட்டணியோ ஆட்சிபீடத்துக்கு வந்தாலும் நாட்டின் நிர்வாக யந்திரம் நமது நாட்டின் தேவைக்கேற்ப திருத்தி அமைக்கப்படாதவரை அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் சரியாகச் செயல்படுத்த முடியாது. நிர்வாக யந்திரத்தைச் சீர்திருத்தி அமைப்பதற்குப் போதிய அதிகாரங்களையுடைய பணிக்குழுவொன்று அமைக்கப்படவேண்டுமென்றும் விசாரணைக் கமிஷன், விசாரணைக் குழுக்கள் போன்று யோசனைகளையும் சிபார்சுகளையும் தெரிவிக்கும் வெறும் குழுவாக இந்த நிர்வாக யந்திர சீர்திருத்தப் பணிக்குழு இருக்கக்கூடாதென்றும் டாக்டர் பானர்ஜி தெரிவித்திருக்கிறார். விசாரணைக் குழுக்கள் நியமித்து அந்தக் குழுக்கள் விசாரணை செய்து அறிக்கை தயாரித்து அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்து அந்த அறிக்கையை அரசாங்கம் ஆராய்ந்து அதில் கூறப்பட்டுள்ள சிபார்சுகளைப் பரிசீலனை செய்து அவற்றைச் செயல்படுத்த முனைவதற்குள் மேலும் பல வருடங்கள் கழிந்துவிடும். டாக்டர் பானர்ஜி தெரிவித்துள்ளதுபோல பணிக்குழுவொன்றை நியமித்து அதற்குப் போதிய அதிகாரங்களும் வழங்கப்பட்டால் நிர்வாக யந்திரத்தைச் சீர்திருத்தம் செய்யும்போதே ஏற்படக்கூடிய தவறுகளையும் திருத்திக்கொள்ளலாம்.

ஒரு நாட்டின் குறிப்பாக ஒரு ஜனநாயகநாட்டின் நிர்வாக யந்திரம் சீராகஇயங்க வேண்டுமெனில் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இருக்கக்கூடாது. நிர்வாகசேவை நியமனங்கள் அரசியல் அடிப்படையில் இருக்கக்கூடாது. பிரான்சில் நாளுக்கொரு மந்திரிசபையும் பாதத்துக்கொரு அரசாங்கமுமாக அரசியல் ஸ்திரமற்றநிலையிலிருந்தபோதும் நிர்வாகத்தில் அரசியல் தலையீடு இல்லாத காரணத்தால் நாட்டின்நிர்வாகம் சீர்குலையாமல் சீராக நடைபெறக் கூடியதாகஇருந்தது.

'ரெட் ரேப்' எனப்படும் சிவப்பு நாடா' முறை நமது நாட்டில் பல விதங்களிலும் இடையூருக இருக்கிறதென்பதை அமைச்சர்களும் ஆட்சிமன்ற உறுப்பினர்களும் அடிக்கடி தெரிவித்துவந்துள்ளனர். ஆயினும் 'சிவப்பு நாடா' கெடுபிடி இங்கு குறையவில்லை. இது தவிர அமைச்சுகளுக்கிடையேயும் இலாகாக்களுக்கிடையேயும் இணைப்புமுறை இங்கு குறைவு இவை அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும் துரிதமாகச் செயல்படுத்துவதற்கு இடையூருக இருக்கின்றன.

நிர்வாக யந்திரசீரமைப்பு எப்போதோ செய்திருக்க வேண்டும். காலங்கடந்துவிட்டாலும் டாக்டர் பானர்ஜியின் யோசனையை விரைவில் செயல்படுத்த அரசாங்கம் முன்வருமென்று நம்புவோம்.

## 'கலைச்செல்வர்களை

# நாவுக்கரசர்தான் நாவலராய்ப் பிறந்தாரா?

## பேராசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளை கருத்து

யாழ்ப்பாணம், சனி

'நாவலர் என்ருல் எல்லாரும் நாவலரல்லர் தமிழ்நாட்டு மக்கள் நெடுங்காலத்திற்கு முன்பிருந்துகூட ஆறுமுகநாவலரை, நாவலர் பெருமான் என்றே வழங்கிவந்துள்ளனர். அந்தநாள் முதல்கொண்டு சமய இலக்கிய உலகிலும், கற்றவர்மத்தியிலும் நாவலரை நாவலர்பெருமான் என்றே வழங்கிவந்தனர்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் பேராசிரியர் ஔவை துரைசாமி "நல்லை நகர் நாவலர்' என்னும் பொருள்பற்றிச் சென்ற புதன்கிழமை மாலை பேசும்போது மேற்கண்டவாறு கூறினர். அவர் மேலும் கூறியதாவது:,

சிறப்புமிக்க நாவலரை நாம் நினைக்கும்போது ஈழநாட்டவர், யாழ்ப்பாணத்தவர் என நினைப்பதில்லை. நாவலர்பெருமான் என்றே நினைக்கிறேம். அவர் யாழ்ப்பாணத்திற்கோ, ஈழநாட்டிற்கோ, தமிழ்நாட்டிற்கோ உரியவரல்ல எங்கெல்லாம் உள்ளத்தால் சிவனை நினைக்கின்ற பண்பாடு பிறந்திருக்கிறதோ அங்கெல்லாம் வாழ்கின்ற மக்களுக்கு நாவலர் சொந்தமானவர்.

தமிழ்நாட்டு சபாநாயகர் புலவர் கோவிந்தன் எனது மாணவர். அவர் 'ஈழநாடு' என்ற பெயர் எப்படி வந்தது? யாழ்ப்பாணத்தில் பாணர்கள் வசிப்பது உண்மையா? என என்னிடம் பல கேள்விகளைக் கேட்பார்.

'ஏழேழுநாடுதான் ஈழநாடாக மாறியது, தமிழ்நாட்டின் தென்பகுதி கடல் கொண்டதென சிலப்பதிகாரம் உட்பட பல நூல்கள் எடுத்துக்கூறியுள்ளன. சில பகுதிகள் அழிந்துவிட்டன. 49 நாடுகள் ஏழேழு நாடுகளாகப் பிரிந்து இருந்தன. இந்த ஏழேழு நாடுகள்தான் ஈழநாடாகி பின் ஈழம் என மாறியது. சங்ககாலத்திலேயே இந்நாடு ஈழநாடாகவிளங்கியதைக்காணலாம். ஈழத்து பூதந்தேவஞர்பற்றி சங்ககால புலவர்களே கூறியிருக்கின்றனர்.

### தலைகுனிந்து வாழும் தன்மை

இப்படிப்பட்ட ஈழநாட்டில் சைவத்திற்கும், தமிழுக்கும் தொண்டாற்றப் பிறந்தவர் நாவலர் பெருமான். தமிழ்மக்கள் பழங்காலம் தொட்டு எதற்கும் ஏன், எப்படி என்று ஆராய்ச்சி நடத்தி வந்தார்கள் இந்த ஆராய்ச்சி 14-ம் நூற்ருண்டுடன் நின்றுவிட்டது. யார் எதைச் சொன்ஞலும் ஏற்கும் நிலை உருவாகியது. தமிழ்மக்களின் அறிவுத்துறையில் மழுக்கம் ஏற்பட்டுவிட்டது. பிறர் எதைச் சொன்ஞலும் அதைக் கேட்டுத் தலைகுனிந்து வாழ்க்கை நடத்தும் நிலைமை தமிழ்மக்கள் மத்தியில் ஏற்பட்டுவிட்டது.

இந்த நிலைமை ஈழத்திலும், தமிழ்நாட்டிலும் நீடித்துக்கொண்டு வரும் பொழுதுதான் நாவலர் பெருமான் தோன்றினர். நாவலர்பெருமான் தோன்றியபோது இருந்த சூழ்நிலை என்ன? பெருமக்கள் தோன்றுவதாஞல் அதற்கான ஒரு சூழ்நிலை அமைந்திருக்கும். சூழ்நிலைதான் மக்களை உருவாக்குவது. தமிழ்மொழிக்கும் சைவத்திற்கும் தொண்டு செய்தற்காகவே நாவலர் தோன்றினர். வினு விடைகளின்மூலம் மக்கள் மத்தியில் மீண்டும் 'ஏன்?, எப்படி?' என்று எதற்கும் கேள்விகேட்கும்பழக்கத்தை உருவாக்கினர்.

### சைவமும் தமிழும் 40 ஆண்டுகள்

1825ம்ஆண்டு தோன்றிய நாவலர் பெருமான் 57 ஆண்டுகள் வாழ்ந்தார். 15 ஆண்டுகள் படிப்பிற்காக் கச் செலவிட்டார். மிகுதி சுமார் 40 ஆண்டு காலமும் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றுவதிலேயே செலவிட்டார். உள்ளம், எண்ணம், முயற்சி எல்லாவற்றையும் சைவத்திற்காகவே பயன்படுத்தினர். இளமையிலேயே புலமை மொசல்லும் வீரஞக விளங்கினர்.

அவரிடம், ஆங்கில, தமிழ் அறிவு போட்டிபோட்டுக் கொண்டிருந்ததைக் கண்ட பாதிரியார், விவிலிய நூலைத் தமிழ்ப்படுத்துவதற்கு அவரைப் பயன்படுத்தினர். நாவலர் நல்ல தமிழ்நடையில் அதைச் செய்திருக்கிருர். இதனல் நாவலர் தாஞ இதைச் செய்தார் என்று சிலர் சந்தேகிப்பதுமுண்டு.

விவிலியச் சொல் நடை பசையற்ற நடை. சொல்லில் தவறில்லாதபடி நல்ல முறையில் வெளியிட்டிருக்கிருர்.

சைவன் எந்தச் சமய நூல்களையும், படிக்கலாம். சிவஞானசித்தியார்என்ற நூலில் முதற்பகுதியில் வேற்று மதங்களைப் பற்றியே கூறப்பட்டிருக்கிறது. மற்றப் பகுதிதான் சைவ சமயத்தைப் பற்றிக் கூறியிருக்கின்றது. எல்லாச் சமயத்தையும் ஒருங்குபடுத்தி, தெளிவு பெற்றதஞல்தான் சைவ சமயம் வளர்ந்தது. எல்லாச் சமயத்தையும் ஒப்பு நோக்கும் பொதுவிதி சைவனுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது சைவர்களுக்கு விரிந்த மனப்பான்மை உண்டாக்கி, எல்லாச் சமயத்தையும் படிக்கவேண்டிய பொறுப்பு சைவனுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நாவலர் பிறப்பதற்குப் பல நூற்ருண்டுக்கு முன்னரே இந்த விதி சைவ உலகில் ஏற்பட்டுவிட்டது. அதஞல்தான் நாவலர் விவிலிய நூலை மொழிபெயர்க்க முன்வந்தார்.

### நாவலரும் நாவுக்கரசரும்

நாவலர்பெருமானை நினைக்கும்போது நாவுக்கரசு நினைப்பும் தோன்றுகிறது. இருவருடைய நூல்களிலும் சிறப்பு மிகுந்திருக்கிறது. நாவுக்கரசர்தான் நாவலராக முன்வந்தாரோ என்றுகூட நினைக்கத் தோன்றுகிறது.

சைவப்பணி செய்யவேண்டும் என்று நாவலர் உறுதிகொண்டார். சைவத்திற்காகப் பிரமச்சரியத்தை மேற்கொண்டார். பிரமச்சரியம் என்ருல் பெரிய ஒழுக்கம் என்று பொருள். நாவலர்போல் தமிழுக்காகவும், சைவத்திற்காகவும், பிரமச்சரியத்தைக் காத்தவர்கள் அவருக்கு முன்பும் இல்லை; பின்பும் இல்லை.

சைவமும், தமிழும் செய்த தவம் தான் நாவலர்பெருமானைப் பெரும் பிரமச்சாரியாகச் செய்து தொண்டாற்றச் செய்தது முதன்முதலாகப் புராணங்களை, சிவன் திருவிளையாடல்களை அவர், பிரசங்கங்கள் மூலம் சொல்லிவந்தார் இந்தச் சொற்பொழிவுகள் மக்கள் மனதில் ஆழப்பதிந்தன. இவர் தமிழ்ப்புலவர் மட்டுமல்ல; பெரும் கல்விமானும்கூட.

நாவலர் பதிப்பித்த நூல்களில் ஒரு சிறு பிழையைக்கூடக் காணமுடியாது. பல வசதியீனங்கள் உள்ள அக்காலத்தில் எவ்வளவு திறமையாக, நூல்களை அவர் பதிப்பித்திருக்கிருர். மீனுட்சிசுந்தரம்பிள்ளையே பதிப்பிக்கத் தயங்கிய நூலைக்கூட, நாவலர் துணிவுடன் பதிப்பித்தார். இப்படிப் பல வழிகளாலும் அவர், தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றினர்.''

## இன்றைய

## நாட்டிலும் நகரிலும்

தற்சமயம் சந்திரனைச் சுற்றி சுமார் பத்து மைல் தூரத்துக்குள் பறந்து திரியும் அமெரிக்க அப்பொலோ-10 என்ற விண்வெளிக் கலத்திலிருந்து பல ஆச்சரியமான தகவல்கள் வந்து கொண்டேயிருக்கின்றன. சந்திர குகைகளிலிருந்து மின்மினி வெளிச்சங்கள் தெ'கின்றன என்று ஒரு விண்வெளி வீரர் தெரிவித்துள்ளார். சந்திரனில் ஆகர்ஷண சக்திக்குள் நுழைந்துவிட்ட அப்பொலோ-10 அந்தக் கிரகத்தில் மனிதர் இறங்குவதற்கு 'வசதியான இடங்களைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கிறது. இவ்வாராய்ச்சிகள் வெற்றி பெறுமாஞல் வருகிற ஆடிமாதத்தில் மனிதரை சந்திரனில் இறக்கும் முயற்சியை அமெரிக்கா மேற்கொள்ளும்.

அப்பொலோ-10இல் சென்றுள்ள அமெரிக்க விண்வெளி வீரர்களில் ஒருவர் கன்னி லக்கினத்திலும் மற்றவர் துலா லக்கினத்திலும், மூன்ருமவர் மீனலக்கினத்திலும் பிறந்தவர்களாம். சில நாட்களுக்கு முன்பு இவர்களுடைய ஜாதக குறிப்பின் பிரகாரம் நடக்கக்கூடிய தினப்பலன்கள் பூமியிலிருந்து ரேடியோ மூலம் இவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டனவாம்.

விஞ்ஞான முன்னேற்றத்தின் உச்சிக் கட்டத்தில் இருக்கும் இந்த வீரர்களும் சோதிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிருர்கள் என்பதை நினைக்க சற்றே ஆச்சரியமாயிருக்கிறதல்லவா? ஒருவருடைய ஜாதகக்குறிப்பில் சந்திரன் இருந்த ராசி மிகவும் முக்கியமானது. அப்படிப்பட்ட சந்திரனையே சுற்றிக் கொண்டு இருப்பவர்களுக்கு பூமியில் கணிக்கப்பட்ட ஜாதகமும் அதை வைத்துக் கூறப்படும் சோதிடமும் பொருத்தமாகுமா என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

பூமியிலிருப்பவர்களுக்கு பிறக்கும் நேரத்தில் சந்திரன் இருந்த இடம்தான் ஜன்மராசி. இதைக் கொண்டே கோசார பலன் என்ற நாளாந்த பலன் கூறப்படுகிறது. சந்திரனுடைய நிலைமாற்றங்கள் பூமியிலுள்ள சகல ஜீவாதிகளையும் பாதிக்கின்றது. பூரணை, அமாவாசை, அட்டமி-நவமி முதலிய திகதிகளில் பிறப்பு, இறப்புகள் நேருவதையும் மனநோயாளர் முதல் சகல நோயாளர்களுக்கும் வியாதி வேண்டும்? சந்திரனைவிட பூமி எவ்வளவோ பெரியதல்லவா'

சந்திரனை அணுகியிருக்கும் மனிதனுக்கு பூமியில் கணிக்கப்பட்ட ஜாதகம் எப்படிப் பொருந்தும் என்பது எனக்கு ஒரே மூளைக் குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டது. உங்கள் பாடு எப்படியோ?

0 0 0

சோதிடத்தில் தமக்கு நம்பிக்கையே கிடையாது என்று இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி கூறிவிட்டார். தந்தையின் மகள் அல்லவா? இந்திய ராஷ்டிரபதியாக இந்திராவே வருவாரென்றும், பிரதமராக மொராஜிதேசாய் வருவாரென்றும் யாரோ ஒரு சோசியர் கூறியதைக் கேள்விப்பட்டதுமே இப்படி தமக்கு சோதிடத்தில் நம்பிக்கையில்லை என்று இந்திரா கூறினராம்.

சந்திரமண்டல பிரயாணிகள் சோதிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் போது இந்திராகாந்தி இப்படிக் கூறுவது மூளையை மேலும் குழப்பியடிக்கிறது. யார் சரி, யார் பிழை என்று எம்மால் கூறமுடியாமலிருக்கிறது.

இந்தப் பிரபஞ்சத்தையும் அதைக் கட்டியாளும் ஆண்டனுக்குத் தான் உண்மை விளங்கும்.

— வழிப்போக்கன்

### மீலாத் சங்க தீர்மானங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி

மஸ்றஉத்தீன் மீலாத் சங்க நிர்வாகக் கூட்டம் கூடி, பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

சென்ற வருடத்தைவிட இம்முறை நிகழவிருக்கும் அன்னதானத்தை (கந்தூரி) சிறந்தமுறையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை குழுமுறையாகச் செயலாற்றுதல்வேண்டும், தொழுகை நடைபெறும் இடங்களை அசுத்தமாக்காத முறையில் நடந்துகொள்ளத்தக்க ஏற்பாடமைத்தல்வேண்டும். குறிப்பாக அங்கத்தவர்கள் ஏற்கனவே சமுகமளித்துச் சகல விடயங்களிலும் பங்குகொண்டுசிறப்பித்தல் வேண்டும். (மு- நி)

### சிவாசார்ய பரீட்சைப் பெறுபேறுகள்

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தாரால் 1966ம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

தயாரித்து அரசாங்கத்துக்குச் சமர்ப்பித்து அந்த அறிக்கையை அரசாங்கம் ஆராய்ந்து அதில் கூறப்பட்டுள்ள சிபார்சுகளைப் பரிசிலனை செய்து விட்டாலும் டாக்டர் பானர்ஜியின் யோசனையை விரைவில் செயல்படுத்த அரசாங்கம் முன்வருமென்று நம்புவோம்.

# ‘கலைச்செல்வர்களை உருவாக்க நமக்கு நேரமில்லை’

## — தீவுப்பகுதி எம். பி.

மண்டைதீவு, வெள்ளி

‘‘இன்றையதமிழ்ச்சமுதாயத்தைக் கூர்ந்து கவனித்தால், நாம் பெருமையடையக்கூடியதாக இல்லை நம் தமிழ்மக்களுடைய அன்றுட வாழ்க்கையைப் பாருங்கள், காலை தொடக்கம் மாலை வரையில் உழைப்பது, பின் களைப்பு மிகுதியால் உண்டு உறங்குவது; இப்படியே வாழ்க்கை போய்க்கொண்டிருக்கிறதேதவிர: சிந்தனைச் சிற்பிகளையோ, இசைமேதைகளையோ கலைச் செல்வர்களையோ உருவாக்க நமக்கு நேரமில்லை. இந்த நிலை எம் மத்தியில் மாறவேண்டும். தமிழர் பண்பாடு தாக்குதலுக்குட்பட்ட காலம் இது. நமது மொழி, கலை, சமயம் முதலிய யாவும் தாக்கப்பட்டுவருகின்றன. தமிழ்ப் பண்பாடு என்ற உரித்தான பாரம்பரியமான பொக்கிஷத்தை எம்மினம் பாதுகாத்தேயாகவேண்டுமெனில் இசை விழா, கலைவிழா போன்ற கலாச்சார விழாக்கள் தமிழ்க் கிராமங்கள் தோறும் நடந்தாகவேண்டும்.’’

இவ்வாறு தீவுப்பகுதி எம். பி திரு. வ. நவரத்தினம் மண்டைதீவு தமிழிசைச் சங்கத்தின் முதலாவது ஆண்டு இசை விழாவை முன்னிட்டு வழங்கியுள்ள ஆசிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

கலை, கலாச்சாரத்துறையில் மண்டைதீவு தமிழிசைச் சங்கம் ஆற்றிவரும் பணிக்கு திரு. நவரத்தினம் தமது பாராட்டுதல்களைக் கூறியுள்ளார்.

தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. சோ. விநாயகலிங்கம் தமது வாழ்த்துச் செய்தியில் இனிய தத்துவங்களைக் காட்டும் முத்தமிழில் ஒன்றான இசை எம் முன்னவர்கள் கட்டிக்காத்து வளர்த்த செல்வம் என்றும் அதனைச் செழிப்புற வளர்க்க பெரு முயற்சி எடுக்கவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

## நாங்கள் கதை....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

டர் ஏன் என்று தெரியுமா:

முடிக்குரிய வழக்கறிஞர் குறுக்கிட்டு: இது காலஞ்சென்ற பந்துல பெரேராவைக் கேட்கவேண்டிய கேள்வி காரை நிறுத்தினுல் லைட்டையும் அணைப்பது தானே வழக்கம்! (சிரிப்பு)

மாஜிஸ்: இதெல்லாம் இவருக்குப் புதிய விஷயம் போலிருக்கிறது. (பலத்த சிரிப்பு.)

செல்வி சில்வா: நாங்கள் கதைப்பதற்காகத்தான் கரை நிறுத்தினுர். ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்கு மேல் நிறுத்தவில்லை.

தொடர்ந்து மூன்ரும் எதிரி கதிரவேலு ஆண்டிக்கான வழக்கறிஞர் திரு டி. பி. ஏகநாயகாவும், நான்காம் எதிரி அந்தோனி பர்ஞந்துக்கான வழக்கறிஞர் திரு. எல். டி எஸ். குணசேகராவும் குறுக்கு விசாரணை செய்தனர்.

மேல் விசாரணை இம்மாதம் 25-ம் திகதி நடைபெறும்.

## தமிழ் தட்டெழுத்தாளா மகாநாடு

வெள்ளவத்தை, வெள்ளி

அகில இலங்கைத் தமிழ் தட்டெழுத்தாளர் சங்கத்தின் வருடாந்த மகாநாடு இம்மாதம் 30-ம் திகதி நடைபெறவிருக்கிறது. தமிழ் தட்டெழுத்தாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பல பிரச்னைகள் குறித்தும் இம் மகாநாட்டில் ஆலோசனை தெரிவிக்கப்படும்.

## மாதர்முன்னேற்ற சங்கம்

அனலைதீவு, வெள்ளி

அனலைதீவு கிராம மாதர் முன்னேற்றச் சங்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ள தையல் நிலையமும் சிறுவர் பாடசாலையையும் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலய அதிபர் திரு. பொ. விஸ்வலிங்கம் திறந்துவைத்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் லெக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம் ஆண்டு மேமாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடாகி பின் ஈழம் என மாறியது. சங்ககாலத்திலேயே இந்நாடு ஈழநாடாகவிளங்கியதைக்காண

## இன்றைய பலன்

சௌமிய வருடம்

24-5-69

சனிக்கிழமை

வைகாசி 11-ந் திகதி

திதி- அட்டமி. இரவு 2-37 மேல் நவமி.

நட்சத்திரம்- மகம். 9-18 மேல் பூரம்.

ராகுகாலம்- 8-52—10-22.

சுபநேரம்- 2-52—4-22.

இன்று பிறந்தவர்களுக்கு- வாகன விருத்தியும் வரவிலும் திருப்தி. இனசன மகிழ்ச்சி, பொன் பொருள் சிறப்பும், கல்வி நலன் தரும். காதலர் வாழ்வில் களிப்பு மிகுதியும், கைதொழில் புரிவோர்க்கு இவ்வாண்டு நல்லாண்டாகும்.

மேஷம்- உதவும் மனப்பான்மை, உண்மையில் நாட்டம்.

ரிஷிபம்- தொழில் சீர்பெறும் ஆனந்தநிலை.

மிதுனம்- பாக்கிய விருத்தி, பணமும் சேரும்.

கடகம்- பொருள் தவறும், பொல்லாங்கு கேட்டல்.

சிம்மம்- பாதையில் பழுதுண்டு, பார்த்து நட.

கன்னி- மேம்பட உரைத்தல், மேலோர் உறவு.

துலாம்- பிரிவின் தாக்குதல்; ஊமை நிலை.

விருச்சிகம்- தாய்ப் பாசம், தனிப் புகழ் சேரும்.

தனுசு- மதி வழி நில். மறுமலர்ச்சி உண்டு.

மகரம்- சிறு பிணி, சிந்தையில் குழப்பம்.

கும்பம்- மாதரால் மகிழ்ச்சி, இன்புற்று வாழ்வீர்.

மீனம்- உறவின் முறிவு ஊமைக் கண்ணீர்.

— சோதிடக்கலாநிதி —

திருமலை வேலுப்பிள்ளை

## சைவமும் தமிழும் 40 ஆண்டுகள்

1825ம்ஆண்டு தோன்றிய நாவலர் பெருமான் 57 ஆண்டு காலம் வாழ்ந்தார். 15 ஆண்டுகள் படிப்பிற்கா

டிருக்கிறது. நாவலர் பிறப்பதற்குப் பல நூற்றுண்டுக்கு முன்னரே இந்த விதி சைவ உலகில் ஏற்பட்டுவிட்டது. அதனுல்தான் நாவலர் விவிலிய நூலை மொழிபெயர்க்க முன்வந்தார்.

நாவலர் துணிவுடன் பதிப்பித்தார். இப்படிப் பல வழிகளாலும் அவர், தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றினுர்.’’



இலங்கை தேசிய லொத்தர் சபையினரால் நடத்தப்படும் ஐந்தாவது ஜாதிக சம்பத சுவீப் டிக்கட்டுகளின் விற்பனையை யாழ்ப்பாண நகர முதல்வர் திரு. எஸ். நாகராசா 20-ந்திகதி 10 மணிக்கு அவரது காரியாலயத்தில் வைத்து ஆரம்பித்து வைத்தார். திரு. நாகராசா முதலாவது டிக்கட் பார்சலை யாழ்ப்பாண ஏஜண்டுகளான யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கத்தின் காரியதரிசி திரு. எஸ் பத்மநாதனிடம் இங்கு கையளிக்கின்றுர். அருகில் நிற்பவர் தேசியலொத்தர் சபையின் யாழ்ப்பாணக்கிளை பொறுப்பதிகாரி திரு. எஸ். இராமநாதன்.

## மண்டைதீவு இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

மண்டைதீவு சிறுப்புலம் கந்தசுவாமி கோவில் திறந்த வெளியரங்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் மண்டைதீவு தமிழிசைச் சங்கத்தின் முதலாவது ஆண்டு இசைவிழாவின் இறுதிநாள் நிகழ்ச்சிகள் வருமாறு:

மாலை 6-00 - 70 மங்கள இசை, 7 - 7-30 பாட்டு, 7-30 - 8-30 பாட்டு, 8-30- 9-30 பாட்டு 9-30 கலையரசு சொர்ணலிங்கம் தலைமையுரை, 9-45 - 10-45 சங்கீதபூஷணம் பொன்.சுந்தரலிங்கம் பாட்டு. 10-45- 11-45 பரம் தில்லைராசா பாட்டு, 11-45 நாதஸ்வரக் கச்சேரி அளவெட்டி என். கே பத்மநாதன் கோஷ்டியினர்;

## தவறிவிழுந்து மரணம்

அனலைதீவு, வெள்ளி

தமது காலைச் சுத்தம் செய்யக் கடலில் இறங்கிய 77 வயது நிரம்பிய மாது ஒருவர் தற்செயலாக தவறி விழுந்துகடலிலேயேமாண்ட சம்பவம் அனலைதீவு மேற்குக் கடலில் நடந்துள்ளது.

வேலுப்பிள்ளை தையலம்மை என்ற மாது கடலில் தம்மைச் சுத்தம்செய்யப் போனதாகவும், கடலில் தவறி விழுந்து மூழ்கி மரணமானதாகவும் மரணவிசாரணையில் தெரிவிக்கப்பட்டது. அனலைதீவு கிராமசேவையாளர் குரு. சு. இரத்தினசபாபதி சாட்சியங்களை ஆஜர் செய்தார். திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. ச. க. சிவனடியான் விசாரணை நடத்தி தற்செயலாகநீரில் மூழ்கியதால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## தாயகம் திரும்பினுர்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இந்தியாவில் பூந்தமல்லி ஞானேபதேச நடு நிலையத்தில் மறைக்கல்விப் பயிற்சி பெற 2 வருடங்களுக்குமுன் சென்றிருந்த இளவாலையைச் சேர்ந்த திரு. இராசேந்திரம் தமது பயிற்சியை முடித்துக் கொண்டு தாயகம் திரும்பினுர்

## ஆலய உற்சவம்

சுழிபுரம், வெள்ளி

சுழிபுரம்-பறுளை சிவசுப்பிரமணியசுவாமி கோவில் வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. வரும் வைகாசி விசாகத் தினத்தன்று தேர்த்திருவிழாவும், அடுத்தநாள் சுழிபுரம் திருவடிநிலை தீர்த்தக்கரையில் தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

திரனுடைய நிலைமாற்றங்கள் பூமியிலுள்ள சகல ஜீவாதிகளையும் பாதிக்கின்றது. பூரணை, அமாவாசை, அட்டமி-நவமி முதலிய திகதிகளில் பிறப்பு, இறப்புகள் நேருவதையும் மனநோயாளர் முதல் சகல நோயாளர்களுக்கும் வியாதி அதிகரிப்பதையும், கடல் கொந்தளிப்பு, கால நிலை மாற்றம் முதலியவை நடப்பதையும் நாம் தத்ரூபமாக காண்கிறேம்.

இப்பலாபலன்கள் மனிதன் பூமியில் இருக்கும் வரையே செல்லுபடியாகும். அவன் சந்திரனை சுற்றிக் கொண்டிருக்கும்போது இதே பலாபலன்கள் பொருந்துமா? பூமியிலிருக்கும்போது சந்திரன் எப்படி மனிதரை பாதிக்கிறதோ அதைவிட அதிகமாகவல்லவோ சந்திரனுக்குச் சமீபத்தில் திரியும் மனிதனை பூமியும் தாக்க

## போதனு ..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கை எடுப்பதென்றும் கட்சி தீர்மானிக்கின்றது.

### தமிழ்மக்கள் முன்வரவேண்டும்

பெற்றேர்விருப்பம் என்ற போர்வையின் கீழ் தமிழ்க் குழந்தைகள் மீது சிங்களத்தைத் திணித்து தமிழினத்தைச் சிதைக்கும் எந்த நடவடிக்கையையும் தீவிரமாக எதிர்த்து இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ்க் குழந்தைகளுக்கு தமிழே போதனு மொழியென்ற கொள்கையை நிலைநாட்ட ஒன்றுபட்டுழைக்க வருமாறு தமிழ் மக்கள் அனைவரையும் கட்சி அழைக்கின்றது.

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பரிசிலனை செய்யப்பட்டு புதிய தமிழ் நூல்கள் வெளியிடுவது ற்றிய ஒரு தேசிய நிறுவனத்தைநிறுவ ஏற்பாடு செய்யும் பொருட்டு திரு.வி. தர்மலிங்கம் பண்டிதர் கா. பொ. இரத்தினம் மு.ஆலாலசுந்தரம் ஆகிய மூவர்குழு நியமிக்கப்பட்டுள்ளது.

### தீண்டாமை ஒழிப்பு

தீண்டாமை ஒழிப்பு பற்றிய சட்டத்தை ஆராய்ந்து அதில் செய்ய வேண்டிய திருத்தங்களை சிபார்சு செய்ய செனட்டர் மு. திருச்செல்வம் செனட்டர். ச. நடராஜா, எஸ். கதிரவேற்பிள்ளை ஆகிய மூவர் கொண்ட குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது.

அடுத்த செயற்குழுக் கூட்டம் மட்டக்களப்பில் அடுத்த மாதம் 22-ம் திகதி நடைபெறும்' (கா. நி)

சகல விடயங்களிலும் பங்கு கொண்டுசிறப்பித்தல் வேண்டும். (மு- நி)

## சிவாசார்ய பரீட்சைப் பெறுபேறுகள்

கொழும்பு, வெள்ளி

அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தாரால் 1966ம் ஆண்டு நடாத்தப்பட்ட சிவாசார்ய பரீட்சையில் பின்வருவோர் சித்திபெற்றுள்ளனர்.

கோப்பாய் சிவசங்கர பண்டிதர் வேதாகம பாடசாலை மாணவர்களான வி. இராஜகோபாலசர்மா, வி. சிவானந்தசர்மா, சி. ரவீந்திர சர்மா, கே. நடராஜசர்மா.

சுன்ஞகம் சதாசிவ பிராசீன வேதாகம பாடசாலை மாணவர்களான கா. சதானந்தசர்மா, ச சண்முகானந்தசர்மா, கு. ஜகதீஸ்வர சர்மா, கே சிவபாலசர்மா, இ. கேதீஸ்வரசர்மா, இ. வாகீஸ்வரசர்மா என்போர் கனிஷ்ட பாக இரண்டாம் பகுதியில் சித்திபெற்றுள்ளனர்.

சுன்ஞகம் சதாசிவ பிராசீன வேதாகம பாடசாலை மாணவர்களான கா. கிருபானந்தசர்மா, சோ. ரஜதகிரீசசர்மா, ச ஸ்ரீதரசர்மா, சே. சிவசுந்தரசர்மா, பா. சோமசுந்தரசர்மா.

மாவிட்டபுரம் வேதாகம பாடசாலை மாணவர்களான வா. கதிர்காமநாதசர்மா, சு. குகதாசசர்மா, சு. மஹேஸ்வரசர்மா, ச. கனகசபாபதி சர்மா, ந. நாகேஸ்வர சர்மா என்போர் கனிஷ்ட பாக முதலாம் பகுதியில் சித்திபெற்றுள்ளனர்.

## இருநாடகம்

சுழிபுரம், வெள்ளி

காரைநகர் யாழ்ரன் கல்லூரி மேடையில். பாசையூர் வளர்மதி நாடக மன்றத்தாரின் ‘தீர்க்கசுமங்கலி’ நாடகமும், எ. பி. செல்லையாவின் ‘யார் கொலைகாரன்’ என்ற சமூக நாடகமும் அடுத்தமாதம் 6-ந்திகதியன்று மேடையேற்றப்படவிருக்கின்றன.

காரைநகர் மத்தர்கேணி வன்மீக விநாயகரின் திருப்பணி நிதிக்காகஇவைமேடையேற்றப்படவிருக்கின்றன.

## நல்ல சூழ்நிலை

பாரிஸ், மே 23

வியட்னுமில் அமைதியேற்படுவதற்கான நல்ல சூழ்நிலை இப்போது தெரிவதாக அமெரிக்க தூதர் திரு. கபோட்லாஜ் தெரிவித்துள்ளார். நிக்சனின் சமாதானத் திட்டத்துக்கு வரவேற்பு கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org